# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 05 சனிக்கிழமை (22.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 330


எம்மைக் கொலை செய்ய முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

ஸ்ரீல.சு.கவையும் பண்டாரநாயக்காக்களையும்

அரசியலில் ஒழிப்பதே ஜே.வி.பியினரின் திட்டம்!

அதற்குத் தமது கட்சியின் பிரமுகர்களே துணைபோவதா எனச் சந்திரிகா சீற்றம்

கொழும்பு,ஒக்ரோபர் 22

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பண்டாரநாயக்காக்களையும் அரசியலில் இருந்து ஒழிப்பதே ஜே.வி.பியின் திட்டம். அதற்கு எமது கட்சியின் பிரமுகர்களே துணை போவதா?" - எனச் சீறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

"இப்போது எஞ்சியிருப்பது ஆக இரண்டு பண்டாரநாயக்காக்கள்தான். ஒன்றில் கொலைசெய்வார்கள் அல்லது வேறு ஏதேனும் செய்வார்கள். எமது கட்சிக்குள்ளே கூட கொலைசெய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" - என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண சபை முதல்வர்கள் ஆகியோரை நேற்றுமுன்தினம் மாலை தமது ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் சேவைக்குப் பாராட்டுத் தெரிவித்து இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும் போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நாட்டிற்கும் - குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - இது முக்கியமானது. நீங்கள் அனைவரும் கட்சியின் மீது அன்பு கொண்டவர்கள். கட்சிக்காக அடி, உதைகளை வாங்கி சிறைக்குக் கூடச் சென்றுள்ளீர்கள். நான் இன்று அதிகம் கூறமாட்டேன். உங்களனைவருக்கும் தெரியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை, வேறு கட்சிகளிலிருந்து பாதுகாப்பதற்காக இயக்கமொன்றை நாம் கட்டி எழுப்பவேண்டியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தமிழர்கள் தீப்பந்தப் பேரணி!

## ஒஸ்லோ நாடாளுமன்றம் முன் ஒன்றுதிரண்டு உரிமைக் கோஷம்



ஒஸ்லோ,ஒக்.22

தமிழ் மக்களின் நீதியானதும் உண்மையானதுமான விடுதலைக் குரலை சர்வதேச சமூகத்தின் முன் ஒலிக்கும் மாபெரும் பொங்குதமிழ் தீப்பந்தப் பேரணி எழுச்சி நிகழ்வு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்துமுடிந்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த எழுச்சி நிகழ்வில் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட நோர்வேத் தமிழர்கள் பங்குபற்றினர்.

தமிழீழ தாயக மக்களின் நீதியானதும் உண்மையானதுமான விடுதலைக்காக தமது ஒருமித்த குரலை புதிய நோர்வே அரசிற்கும் அனைத்துலக சமூகத்திற்கும் வலியுறுத்தினார்கள்.

அடைமழையுடன் சீரற்ற காலநிலை நிலவிய

(18ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ்க் கூட்டமைப்பு தலைமையகம் திருமலையில் திறப்பு

திருகோணமலை,ஒக்.22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையகம் நேற்று திருகோணமலையில் இலக்கம் 10, ஒளவையார் வீதியில் மாலை 5.00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். 'இந்த அலுவலகம் திறக்கப்பட்டதன் மூலம் நீண்டநாள் குறை ஒன்று நிவர்த்தி செய்யப்பட்டதுடன், வடக்கு - கிழக்கு மக்களினதும் குறிப்பாக திருகோணமலை மாவட்ட மக்களினதும் குறைநிறைகளை ஆராய்வதற்கு வசதி ஏற்பட்டுள்ளது.' என்று திருமலை மாவட்ட எம்.பி. க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். (ஐ-க)

## மேலும் 5,800 பேருக்கு மீட்புநிதி மீளளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

தமிழீழ மீட்புநிதிக் கடன் மேலும் 5 ஆயிரத்து 800 பேருக்கு மீளளிப்புச் செய்யப்பட இருப்பதாக விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்திருக்கின்றது.

மீளளிப்புச் செய்யப்படவுள்ள மீட்புநிதியைப் பெறத்தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் இவர்களுக்கான கடன் மீளளிப்புச் செய்யப்படும் என்று நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். பெயர்ப் பட்டியல் பின்னர் உதயனில் வெளியாகும்.

## பாதுகாவலர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக். 22

வடக்கில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்று யாழ். அரச செயலகம் முன் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமற்போனவர்களின் விவரம் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத் வேண்டும், குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படல்வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக யாழ். அரசஅதிபர் கே.கணேஸ் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார். (ஐ-ரி)

## வடக்கு,கிழக்கு தேர்தல் நிலையங்களில் பணிக்கு வெளியிலிருந்து அலுவலர்கள்!

கொழும்பு,ஒக்.22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்குக் கிழக்கில் தேர்தல் மோசடிகள் இடம்பெறக் கூடுமென்று கருதப்படும் தேர்தல் நிலையங்களின் பணிகளுக்காக வெளியிலிருந்து உத்தியோகத்தர்களை நியமிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

அதேபோல், ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக மாவட்ட ரீதியிலுள்ள அரசியல் கட்சி அலுவலகங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, 'கட் - அவுட்'களை வைப்பதற்கும் தேர்தல்கால சோதனைகளை மேற்கொள்வதற்கும் தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் கட்சிச் செயலாளர்களைத் தேர்தல் ஆணையாளர் தமது அலுவலகத்தில் நேற்றுக்காலை சந்தித்தார். சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற சந்திப்பின்போது அவர்களின் முறைப்பாடுகளையும், குறைபாடுகளையும் தேர்தல்

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் இன்று தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு

திருகோணமலை,ஒக்.22


தமிழ்த் தேசிய எழுச்சிநிகழ்வு திருகோணமலையில் இன்று எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நடைபெறவுள்ளது.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரியும், புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை உலகுக்கு வலியுறுத்தியும், ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு எதிராக விதித்துள்ள பயணத் தடையை மீளப்பெறவேண்டும் எனக் கோரியும், அரசினதும் அரச படைகளினதும் யுத்த நிறுத்த மீறல்களையும், மனித உரிமை மீறல்களையும் சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கடந்த ஜூலை மாதம் வவுனியாவில் வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் இந்த எழுச்சி நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

நகரிலுள்ள இந்துகலாசார மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள சிறுவர் பூங்கா அரங்கில்

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






இந்திய இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொதுச்சுடரினை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ரவிராஜ் ஏற்றுகிறார். உயிரிழந்தவர்களின் திருவுருவப்படத்தையும் நிகழ் வில் கலந்து கொண்ட உறவினர்கள், ஆஸ்பத்திரிப் பணியாளர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: பிரபா)*

# இந்தியப் படைகளால் கொல்லப்பட்டோருக்கு ஆஸ்பத்திரியில் உணர்வுபூர்வ அஞ்சலி!

யாழ்ப்பாணம்,ஒக்.22

1987ஆம் ஆண்டு வைத்தியசாலையில் கடமையில் இருந்தபோது இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட 21 ஊழியர்களினதும் 18 ஆவது அஞ்சலி நிகழ்வு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரும் சத்திரசிகிச்சை நிபுணருமான டாக்டர் சு.ரவிராஜ் தலைமையில் இந்த வைபவம் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

முற்பகல் 10 மணிக்கு 2 நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான நிகழ்வை டாக்டர் ரவிராஜ் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பதில் பணிப்பாளருடன் சந்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சிவந்தாவும் மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து வைத்தியசாலைக் கணக்காளர் சுதந்திரபாலா, சிரேஷ்ட எழுதுநர், தாதிய பரிபாலகர் ஆகியோருடன் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மலரஞ்சலியை அடுத்து 21 ஊழியர்களினதும் திருவுருவப்படங்களுக்கு 21 ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன. இதனையடுத்து தேவாரம், கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கப்பட்டன. அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அஞ்சலிக் கூட்டத்தில் போதனா வைத்தியசாலைப் பரிசாரகர் சி.மார்க்கண்டு கவிதை பாடிக் கவிதாஞ்சலி செலுத்தினார்.

(ஐ-15-7-86)

# தனங்களப்பில் மிதிவெடி அகற்றிய பிரதேசம் நேற்றுக் கையளிப்பு!

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தனங்களப்பில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட விளை நிலப் பிரதேசத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்தப் பிரதேசத்தில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பிரதேசமான 1859.875 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனிடம் இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் பணிக்கான அதிகாரி மேஜர் கமகேயினால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி இராணுவ அதிகாரி பிரிகேடியர் குணசேகரா, மிதிவெடி அகற்றல் அலுவலக மாவட்ட இணைப்பாளர் ஆனந்தராசா, தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் எஸ்.பரந்தாமன், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள், அந்தப் பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.குமாரசாமி, விவசாய சம்மேளனத் தலைவர் திருச்செந்திநாதன், படைத்தரப்பு அதிகாரிகள் மற்றும் படையினர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் படையதிகாரி மேஜர் கமகே, தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன், விவசாய சம்மேளனத் தலைவர் திருச்செந்திநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(9-31-81)

# இரவுவேளை வீடு புகுந்து பயமுறுத்தி பெண்களின் நகைகள் கொள்ளை

## மட்டுவில் வடக்கில் ஆயுதபாணிகள் கைவரிசை

சாவகச்சேரி,ஒக்.22

மட்டுவில் வடக்கிலுள்ள வீடு ஒன்றில் கடந்த வியாழன் இரவு ரொக்கப் பணம் மற்றும் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன. மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்திற்கு முன்பாக மாணாவளைப் பகுதியில் உள்ள சின்னத்துரை என்பவரது வீட்டிலேயே வியாழன் இரவு 11.30 மணியளவில் ஆயுதபாணியாகச் சென்ற கொள்ளையர்கள் வீட்டில் உறக்கத்தில் இருந்த பெண்களைக் கத்தி முனையில் பயமுறுத்தி தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச்சென்றனர் என்று கூறப்படுகிறது.

வீட்டில் பெண்கள் கழுத்திலும் கையிலும் அணிந்திருந்த காப்புகள், சங்கிலி என்பன கொள்ளையர்களால் கத்தி முனையில் அபகரிக்கப்பட்டன.

சத்தம் போட்டால் கத்தியால் குத்திவிடுவோம் என்றும் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிடுவோம் என்றும் பயமுறுத்திய கொள்ளையர்கள் மொத்தம் 20 பவுண் தங்கநகைகளையும் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் வீடியோ கமெரா என்பவற்றையும் கொள்ளையடித்துக்கொண்டு தலைமறைவாகினர்.

சுமார் 10 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் இக்கொள்ளையில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மோட்டார் சைக்கிள்களில் வந்தே கொள்ளையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சாவகச்சேரி குற்றத்தடுப்புப் பொலீஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-31)

# முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.22

இமையாணன் கலைமகள் முன்பள்ளியின் 23ஆவது விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கலைமக்ள் சனசமூக நிலையத் தலைவர் எம்.நிரேஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி இணைப்பாளர் செல்வி மரியரட்ணம் பத்மசேகரியும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன், சிறுவர் பாதுகாப்பு நிறுவன பங்காளர் மேம்பாட்டு முகாமையாளர் ஏ.பேரின்பநாதன், இமையாணன் அ.த.க பாடசாலை அதிபர் திருமதி சந்திரசேகரம் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-410)






# வடமராட்சி வடக்கு மீனவர்கள் இன்று படை அதிகாரிகளோடு கலந்துரையாடல்

## கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில்

வடமராட்சி,ஒக்.22

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பின்னர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ள வடமராட்சி வடக்குப் பிரதேச (பருத்தித்துறை தொடக்கம் தொண்டைமானாறு வரை) மீனவர்கள் படையினரால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகளுக்கும் படை அதிகாரிகளுக்குமிடையே இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ். அரச அதிபர் கே. கணேஷ், 524 ஆவது (வடமராட்சி) படைப் பிரிவு, 512 ஆவது (யாழ்ப்பாணம்) படைப் பிரிவு ஆகியவற்றின் தளபதிகள், வடமராட்சி வடக்கு மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் பாஸ் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அதற்கென அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என படைத்தரப்பால் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ,பாஸ் நடைமுறைகள் ஏதுமின்றி மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள வசதி செய்து தரப்படவேண்டும் என மீனவர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுவருகிறது.

இது தொடர்பாக இன்றைய கலந்துரையாடலில் பேசப்படும் என மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்

(ஐ)

# ஐஸ்கிறீம் கடை உரிமையாளர்கள் இருவருக்கு நீதிமன்றில் அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

மலத்தொற்று ஏற்படும் வகையில் ஐஸ்கிறீம் தயாரித்தமைக்காக யாழ்.நகரில் உள்ள இரண்டு குளிர்பான நிலையங்களின் உரிமையாளர்களுக்கு யாழ். நீதிமன்றம் தலா 7 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக விதித்தது.

இரண்டு குளிர்பான நிலையங்களில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீமில் மலத்தொற்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்தக் குளிர்பான நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ். உணவு மருந்துப் பரிசோதகர் எஸ்.மகாதேவா இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குளிர்பான நிலையங்களின் உரிமையாளர்கள் தாம் குற்றவாளிகள் என்பதை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து அவர்களை அபராதமாகத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு உத்தர[illegible] நீதிவான், இவ்வாறு சுகாதாரமற்ற [illegible]யில் இனிமேல் ஐஸ்கிறீம் தயாரிக்க[illegible]தென எச்சரித்து விடுதலை செய்தார்.

(ஐ-8)

# மினிபஸ் பயணி எடுத்துவந்த 2 லட்சம் ரூபா பணம் அபேஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.22

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் மினிபஸ் ஒன்றில் பயணம் செய்த பெண் ஒருவரின் இரண்டு லட்சம் ரூபா பணம் காணாமற்போனதையடுத்து அந்த மினிபஸ்ஸில் பயணம் செய்த அனைவரும் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து பொலீஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்றுக்காலை பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த மினிபஸ்ஸில் இருபாலைச் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பெண் ஒருவர் ஏறினார் என்றும் -

மினிபஸ் நல்லூரை அண்மித்தபோது அந்தப் பெண் தான் கைப்பையில் எடுத்து வந்த இரண்டு இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுவிட்டதாக சாரதியிடம் முறையிட்டார் என்றும் - கூறப்படுகிறது.

இதனையடுத்து, மினிபஸ் சாரதி பயணிகளை ஏற்றியவாறே பஸ்ஸை பொலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து நிறுத்தினார். யாழ்.பொலீஸாருக்கு இச்சம்பவம் தொடர்பாகத் தெரியப்படுத்தினார்.

பொலீஸார் மினிபஸ்ஸில் பயணம் செய்த அனைவரையும் துருவித் துருவிச் சோதனையிட்டனர். இதன்போது எவரும் பொலீஸாரால் கைதுசெய்யப்படவில்லை. சந்தேகத்திற்கிடமானவர்களிடம் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டன. எனினும் பணம் கிடைக்கவில்லை.

(ஐ-7)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# வேவு பார்க்கும் கைங்கரியம் விமானம் வீழ்ந்ததால் அம்பலம்

இலங்கை விமானப்படையின் ஆளில்லா உளவு விமானம் வீழ்ந்து நொறுங்கிய விவகாரம் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஆழ ஊடுருவிய நிலையில் அது புலிகளின் பிரதேசத்துக்குள்ளேயே வீழ்ந்து நொறுங்கியிருக்கின்றது.

புலிகள் பிரதேசத்துக்குள் அது வீழ்ந்ததால் இரண்டு விடயங்களில் சர்ச்சை எழுந்துள்ளது. முதலாவது-வேவுபார்க்கும் உளவு விமானம் ஒன்று புலிகளின் பிரதேசத்திற்கு மேல் பறந்த விவகாரம். மற்றது - அது எப்படி வீழ்ந்தது என்ற விடயம்.

புலிகளின் பிரதேசத்துக்குள் அது வீழ்ந்ததால் புலிகளே அதைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாமோ என்ற சந்தேகம் பல தரப்பிலும் - ஏன் படைத் தரப்பிலும் கூட - கிளப்பப்பட்டது.

இரணைமடுக் குளத்துக்கு அருகே உள்ள புலிகளின் விமான ஓடு தளத்தை வேவு பார்த்த சமயமே அது புலிகளின் இலக்குக்கு உள்ளாகி, வாங்கிக் கட்டிக்கொண்டு போய் மாங்குளத்துக்கு அருகே விழுந்து நொறுங்கியதாக சில வட்டாரங்களில் சந்தேகம் கிளப்பப்படுகின்றது.

ஆனால், அதுதான் நிலைமை என்றால், ஒரு சில அடிகளே நீளமுள்ள மிகச் சிறிய விமானம், பல்லாயிரக்கணக்கான அடிஉயரத்தில் பறந்து கொண்டிருக்கையில் தரையில் இருந்து துல்லியமாக அதை இலக்கு வைத்துத் தாக்கி வீழ்த்தும் திறன் புலிகளிடம் இருப்பதாகவே ஒப்புக்கொண்டுவிட்டதாகிவிடும்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே அது வீழ்ந்தது என்று கூறி, அந்த சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைக்க எத்தனித்துள்ளது அரசு. சரி, அதை அப்படியே என்று விட்டு விடுவோம்.

அடுத்தது - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு மேல் அரசின் விமானப் படையின் வேவு விமானம் பறந்தமை பற்றிய சர்ச்சை முக்கியமானது.

ஏற்கனவே, பல தடவைகள் இத்தகைய ஊடுருவல் நடவடிக்கை தொடர்ந்து அரசுத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பல தடவைகள் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். இது ஒரு பாரதூரமான யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கை என்றும் புலிகள் தெரிவித்து வந்தனர்.

வேவு விமானம் வீழ்ந்து நொறுங்கியதை அடுத்து இந்தக் குற்றச் சாட்டுக்கு நொண்டிச்சாக்குப் பதில் கூறியிருக்கின்றார் அரசின் பேச்சாளரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா.

*"இவ்வாறு ஆளில்லா உளவு விமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பறப்பது ஒன்றும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல. இறையாண்மையுடைய இலங்கை அரசு தனது வான் பிராந்தியத்தில் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான முழு உரிமையும் கொண்டுள்ளது. நாட்டின் கடல், தரை, ஆகாயப் பரப்புகளைப் பாதுகாக்கும் முழுமையான பொறுப்பு பாதுகாப்புப் படைகளுக்கு உண்டு. இந்த விமானம் புலிகளின் பிரதேசம் மீது வெறுமனே பயிற்சியில்தான் ஈடுபட்டது. அது அங்கு குண்டுகளைப் போடவில்லை"* - என்று வியாக்கியானம் கூறுகின்றார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

இலங்கை அரசுக்கு பறப்புப் பயிற்சி நடத்துவதற்கு இடமில்லாமல் புலிகளின் பிரதேசத்தின் மீது பயிற்சிப் பறப்பில் ஈடுபட்டது போலவும் -

ஆளில்லா உளவு பார்க்கும் விமானம் புலிகளின் பிரதேசத்தின் மீது வேவு நடவடிக்கையில் ஈடுபடாமல் வெறும் பயிற்சிப் பறப்பில் மட்டுமே ஈடுபட்டது போலவும் -

முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பது போன்று - மக்களின் காதில் பூச்சுற்றுவது மாதிரி - கதை அளக்கின்றார் அரசுப் பேச்சாளர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் மீது வேவு விமானம் பறப்பதே உளவு பார்க்கும் வேலைதான்.

புலிகளின் பிரதேசத்துக்கு மேல் உள்ள வான்பரப்பில் அரசின் விமானங்கள் பறப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பது யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்பாட்டில் தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. அதை வைத்துக் கொண்டு, வான் பரப்பு தனக்குரியதே என்ற பாணியில், இந்த வேவு நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு அரசுத் தரப்பு முனைவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இத்தகைய உளவுப் பறப்புகள் அமைதிச் சூழலையும் யுத்த நிறுத்தத்தின் தாற்பரியத்தையும் பாதிக்கும் செயல்கள் என்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் விசனம் தெரிவித்திருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த உளவு விமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வீழ்ந்திருக்காவிட்டால் இவ்வாறு உளவு விமானம் புலிகளின் பிரதேசத்துக்குள் பறந்ததையே இலங்கை அரசுத் தரப்பு ஒப்புக்கொண்டிருக்கமாட்டாது.

இப்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் - அதுவும் ஆழமாக அதன் மையப்பகுதி வரை ஊடுருவியுள்ள நிலையில் - இந்த விமானம் வீழ்ந்து நொறுங்கியதால், அதற்கான தெளிவான சாட்சியங்களைக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கக்கூடியதான ஆதாரங்கள் புலிகள் வசம் சிக்கி இருப்பதால், வேறு வழியின்றி 'திருடனுக்கு தேள் கொட்டியது போலத் தடுமாறுகிறது அரசுத் தரப்பு.

அதைச் சமாளிக்கவே இவ்வாறான 'சளாப்பல்' களை அவிழ்த்துவிடுகிறார் அரசுப் பேச்சாளர்.

# போஷாக்குக் குறைபாடு உள்ளவர்கள் வடக்கு- கிழக்குப் பகுதியிலேயே அதிகம்

## உலக உணவுத்திட்ட அறிக்கையில் தகவல்

கொழும்பு,ஒக்.22

நாட்டில் போஷாக்கின்மையால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளில் பெரும்பாலானோர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். உலக உணவுத் திட்ட அறிக்கையில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் வாழும் பெண்களில் 67 சதவிகிதத்தினர் போஷாக்குக் குறைவால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அதில் 37 சதவிகிதத்தினர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

போஷாக்குக் குறைவால் பாதிக்கப்படும் பெண்களுக்குப் பிறக்கும் சிசுக்களும் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றன.

வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சிறுவர்களில் 25 சதவிகிதத்தினர் போஷாக்குக் குறைபாட்டால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைகளில் 40 சதவிகிதத்தினர் போஷாக்குக்குறைபாடு உள்ளவர்களாவர்.

குடிதண்ணீர், உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள்ஆகியவை தேவையான அளவு கிட்டாமையே போஷாக்குப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாகும் - இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-205)

# நாட்டின் வரலாற்றில் அதிகூடிய அளவில் இவ்வாண்டு சிறுபோக நெல் கொள்வனவு

இலங்கையின் வரலாற்றில் அதிகூடிய சிறுபோக நெல் கொள்வனவு இவ்வாண்டிலேயே நடைபெற்றுள்ளது என்று விவசாய அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த ஆறு பருவகாலங்களாக நாட்டில் நெல்கொள்வனவு அரசால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இம்முறை 18 பிரதான நெல்லுற்பத்தி மாவட்டங்களில் 128 கோடி ரூபாவிற்கு இதுவரை 63 ஆயிரத்து 888 மெட்ரிக் தொன் நெல் அரசால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக 43 ஆயிரத்து 951 மெட்ரிக் தொன் நெல்லும் விவசாய கேந்திர நிலையங்கள் ஊடாக 17 ஆயிரத்து 21 மெட்ரிக் தொன் நெல்லும் விவசாய அமைப்புகள் ஊடாக 2 ஆயிரத்து 916 மெட்ரிக் தொன் நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதியில் 75 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்யமுடியுமென விவசாய அமைச்சு கூறுகிறது. தற்போதும் நெல் கொள்வனவு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

(ஒ-84)

# முகமாலை - யாழ்ப்பாணம் பஸ்ஸில் முடிச்சுமாறியின் கைவரிசை முறியடிப்பு!

முகமாலையில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் நோக்கி வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் பயணி ஒருவரின் பயணப்பையை அபகரிக்க முற்பட்டவரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் முகமாலையில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தது. சாவகச்சேரி பஸ் நிலையத்தில் மனைவி, பிள்ளைகளுடன் நபர் ஒருவர் அந்த பஸ்ஸில் ஏறினார்.

அக்குடும்பத்தினர் தம்முடன் இரு பொதிகளை உடன் எடுத்து வந்திருந்தனர். நாவற்குழி வரையான பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்ட அந்த நபர், புத்தி சுவாதீனம் உடையவர் போன்று நடந்துகொண்டார். இவரது நடவடிக்கையால் சகபயணிகளுக்குப் பெரும் அசௌரியம் ஏற்பட்டது.

நாவற்குழி வந்ததும் மனைவி, பிள்ளைகளுடன் அந்த நபர் இறங்கினார். அப்போது பஸ்ஸிலிருந்து 3 பொதிகளை அவர்கள் கீழே இறக்கிவைத்தனர். பஸ்ஸும் புறப்பட்டது. ஆனால், இரு பொதிகளுடன் ஏறியநபர் 3 பொதிகளை இறக்கியதை அவதானித்துவிட்ட நடத்துநர் பஸ்ஸை நிறுத்தி, பயணப் பொதிகளைச் சரிபார்க்கும்படி பஸ்ஸிலிருந்த பயணிகளிடம் கோரினார். அப்போது பயணிகளில் ஒருவர் தனது பயணப் பொதியைக் காணவில்லை என்றும் - அதனுள் பெறுமதியான பொருள்கள் உள்ளன என்றும் - பதற்றத்துடன் கூறினார்.

உடனடியாக முன்னர் இறங்கிய குடும்பத்தினரை நோக்கிப் பொதியை இழந்தவரை அழைத்துக்கொண்டு நடத்துநர் சென்றார்.

இதேவேளை, 3 பொதிகளையும் அக் குடும்பத்தினர் எடுத்துச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய நடத்துநர் அவர்களிடமிருந்து மூன்றாவது பொதியை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தார். சமீபகாலமாகப் பொதுப் போக்குவரத்து வாக னங்களில் முடிச்சு மாறிகள் நடமாட்டம் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-12)

# தேர்தல் முறைகேடுகள்: 6 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

கொழும்பு,ஒக்.22

அரச வளங்கள் முறையற்ற விதத்தில் தேர்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவது உட்பட தேர்தல் ஊழல், மோசடிகள் தொடர்பாக லஞ்ச ஊழல் புலனாய்வு விசாரணை ஆணைக்குழுவிற்கு இதுவரை ஆறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் விசேட கூட்டமொன்றை ஆணைக்குழு அடுத்தவாரம் நடத்தவுள்ளது என அதன் அதிகாரியொருவர் கூறினார்.

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை, மகாவலி அபிவிருத்தி அமைச்சு, மட்பாண்டக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்குச் சொந்தமான 12 வாகனங்கள் தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் -

பல இடங்களில் சமுர்த்தி ஊழியர்கள் அரசியல் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனவும் -

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் ஊழல் மோசடிகளைக் கண்காணிப்பதற்காகத் தனியான புலனாய்வுக் குழுவொன்றைத் தாம் நியமிக்கவுள்ளார் என லஞ்ச, ஊழல் புலனாய்வு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (க)

# நல்லாசிரியர் விருதில் தனிச்சிங்களம்

அச்சுவேலி,ஒக்.22

ஜனாதிபதியால் இந்த ஆண்டு நல்லாசிரியர்களுக்கு வழங்கப்பட்ட விருதில் சிங்கள மொழி மட்டுமே இடம்பெற்றுள்ளமை தமிழ் ஆசிரியர்களைக் கவலை கொள்ளவைத்துள்ளது.

"வித்தியா விஜயஸ்ரீ சம்மண" என சிங்கள மொழியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட விருதே இம்முறை நல்லாசிரியர் விருதுபெற்ற தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்த விருதில் பொறிக்கப்பப்பட்ட வாசகத்தின் கருத்தை விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் விருதில் தனிச்சிங்களம் இடம்பெற்றிருப்பதும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருப்பதும் தமிழ் ஆசிரியர்களை அவமானப்படுத்துவதாக உள்ளன என்று ஆசிரிய சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் வலய மட்டத்தில் சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தேசிய ரீதியில் தெரிவானவர்களுக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவிப்பு விழா இடம்பெற்றது. அதேவேளையில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு திருகோணமலையில் வைத்து விருது வழங்கப்பட்டது.

கடந்த வருடங்களில் நல்லாசிரியர்களாகத் தெரிவாகும் தமிழ் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட சான்றிதழே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-11)

# வடக்கு - கிழக்கு தேசியப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

அச்சுவேலி,ஒக்.22

வடக்கு - கிழக்கில் உள்ள தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வலயக் கல்வி பிராந்திய ரீதியாக நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுவருகின்றன.

ஆனால், தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவின் கவனத்திற்கு கல்விசார் தொழிற்சங்கங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து வடக்கு - கிழக்கில் உள்ள தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக உரிய ஆவணங்களை பரிசீலனை செய்து பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் மாகாண கல்வி அமைச்சிற்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-11)

## நாளை

ஐப்பசி 06
ஞாயிற்றுக்கிழமை
23.10.2005
திதி: சஷ்டி
மாலை: 06.02 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
முன்னிரவு 10.01 வரை
சுபநேரம்: 09.02 - 06.02
ராகுகாலம்: 04.32 - 10.32
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உங்களை தீமை வெல்லாதிருக்க நீங்கள் தீமையை நன்மையால் வெல்லுங்கள்.
- ஓர் அறிஞர்.

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

## அபிவிருத்தி வேலைகள் (யுனிசெவ் நிதி)

யாழ்ப்பாணம் பிரதி மாகாணப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் திணைக்களம் அவர்களால் பின்வரும் வேலைகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 08.11.2005 செவ்வாய்கிழமை பிற்பகல் 3 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 09.11.2005 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்னதாக இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|
| 01. வெளிநோயாளர் பிரிவில் அபிவிருத்தி வேலை | 3000/= | 200/= |
| 02. பொதுமக்கள் காத்திருக்கும் மண்டபம் நிர்மாண வேலை | 2000/= | 200/= |

வைத்திய கலாநிதி **ஆ. கேதீஸ்வரன்,**
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

(சி-45873)(42-32-15-45)

## 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி கிரியை அழைப்பும்



கடந்த 23-09-2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியை கள் நாளை (23-10-2005) ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி **மாசிலாமணி மணிமேகலாதேவி**

'மணிமஹால்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.

மா.சுதர்சன்
(மகன்)
தொ.பே.077-6314244

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 - 12 - 1938



மறைவு 22 - 09 - 2005

திருமதி **சின்னராசா சரஸ்வதி**

31 நாள்கள் ஆனாலும் அழியவில்லை
எம்மனத்துயரம் அம்மா!
அன்பையும் அரவணைப்பையும்
எம்மீது கொட்டி எமக்கெல்லாம்
வழிகாட்டியாக இருந்த எமது அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக்கடலில் தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும் உங்கள் நினைவுடனே
வாழ்கின்றோம் அம்மா என்றும் எம் நினைவுடனே
நிலைத்திருக்கும் தங்கள் ஆத்ம சாந்திக்காக
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

65, ராணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (41762)(32-15-45)

கணவர், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

## வலி.தென்மேற்கு கைத்தொழிலாளருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.22

எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவிருந்த 'சூழல் பாதுகாப்பு உரிமம்' வழங்குவது தொடர்பா விளக்கக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

கூட்டம் இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-185)

## ராமகிருஷ்ண மிஷனின் பவளவிழா நிகழ்வுகள்

கொழும்பு,ஒக்.22

கொழும்பு ராமகிருஷ்ண மிஷனின் பவளவிழா நிகழ்வுகள் இன்றும் நாளையும் வெள்ளவத்தையிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்ம கணானந்தஜி மகராஜின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக செங்கல்பட்டு ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சிரூபாஷானந்தஜி மகராஜ், பெங்களூர் ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கீர்த்திதானந்தஜி மகராஜ் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

இந்த நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறும் 'இலங்கையில் ராமகிருஷ்ணமிஷன் செயற்பாடுகள்' என்ற பவளவிழாச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பவளவிழாவில் சிறப்பு நிகழ்வாக மருதனார்மடம் வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்ல மாணவர்களின் இசை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (3-173-202)

## உதவியாளருக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றாதவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 11 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

முகாமைத்துவ உதவியாளர் சேவைக் குறிப்பின் பிரகாரம் வகுப்பு III இற்கு உள்ளீக்கப்படும் அலுவலர்களது சேவையை உறுதிப்படுத்தல், பதவி உயர்வு என்பனவற்றுக்காகவே இந்தக் கணனிப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சியில் முன்னர் பங்குபற்றாதவர்கள், இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார். (3-203)

## 5 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



மலர்வு 23-08-1920 உதிர்வு 17-10-2000

வருடம் ஐந்து சென்றாலும்
தீருமோ எம் துயரம்
அம்மா உங்கள்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
30/2, மருதடி லேன்,
நல்லூர்.

(41755-11)

திருமதி **நல்லம்மா செல்லையா**
(சன்லைட் ஸ்தாபகரின் துணைவியார்)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



22-09-2005 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

திருமதி **அம்பலவாணர் புஸ்பராணி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22-10-2005) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு ஏகும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

48, தோணிக்கல்,
வவுனியா. (41758)(46-32-15-45)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிரேசு நடராசா

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரேசு நடராசா அவர்கள் (கொழும்பு வர்த்தகர்) 20.10.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிரேசு - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா, இராசமணி, தம்பாபிள்ளை, செல்லத்துரை, பொன்னுத்துரை, கனகம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (41765)(32-45-15)

பொ.அன்பரசன்
(மகன்).

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7265160 முதல் 7276419 வரை சீட்டிழுப்பு இல. 178 திகதி 20-10-2005

வெற்றி எண்கள் **5 3 8 7 3 3** சுப்பர் எண் **18**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,04,59,250/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,04,59,250/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 98 | 5,000/- | 4,90,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 981 | 500/- | 4,90,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,769 | 50/- | 4,88,450/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 96,849 | 10/- | 9,68,490/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,692 | 20/- | 1,93,840/- |
| | | மொத்தம் | 44,32,180/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 50,34,780/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,07,31,000/-**

தொடர் இல. 6338054 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 24 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செய்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான ஹீரோ மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 7273610-2-18 |
| மாத்தறை | 7266762-3-53 |
| அம்பாறை | 7271016-7-17 |
| புத்தளம் | 7272177-2-75 |
| கண்டி | 7271356-2-16 |
| நுவரெலியா | 7269106-0-58 |
| ஹம்பாந்தோட்டை | 7267567-0-88 |
| மொனராகலை | 7274316-0-82 |


யாழ் மாவட்டத்தில் புதியதோர் Software Company உதயம்!!!!!

நாடளாவிய ரீதியில் Software Development மற்றும் Web Development துறைகளில் உலகளாவிய தரத்தில் சேவைகளினை வழங்கும் எமது நிறுவனம் யாழில் மையம் கொள்கிறது.



எப்போதும் எட்டிய தூரத்தில்...

- Cheep Cost! Quality Host!
- சிறந்த வாடிக்கையாளர் சேவை!

உங்கள் நிறுவனத்துக்கென ஒரு Website உண்டா?
e-mail உண்டா?
இனியும் தாமதிப்பதா?

உலகளாவிய ரீதியில் இதுவரை 100 க்கும் மேற்பட்ட இணையத்தளங்கள்

Domain Registration · Web Hosting · Web Designing

Special Offer upto 30th October !!!

- Hardware Maintenance
- Software Development
- Computer Training
- Digital Designing
- Digital-Printing
- Type Setting
- Networking
- Advetising
- 1place4u.com

ஆரம்பத்தில் பலர். முடிவில் ஒருவர்தான் .



- நிறுவனத்தை கணனிமயப்படுத்த....
- மிகவும் குறைந்த விலையில் தமிழ் Or ஆங்கில மொழியில் புறோகிறாம்கள்
- எம்மால் வடிவமைக்கப்பட்ட பல்தரப்பட்ட இலகுவான புறோகிராம்கள் உள்ளன.

Speed Information Technology Net
72/28,Panikkar Lane, Off Palaly Road,Thirunelvely,Jaffna
e-mail: info@speeditnet.com URL: http://www.speeditnet.com Hotline: 0777 563213

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டிலான மாவட்ட ரீதியிலான ஹொக்கிப் போட்டி இன்று காலை 7.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரம் வருமாறு-

✱ காலை 7.30 மணி - யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் பலாலி ஆசிரியர் கலாசாலை (பி) அணி.

✱ காலை 8.30 மணி - கிறாஸ் கொப்பாஸ் அணி எதிர் பலாலி ஆசிரியர் கலாசாலை (ஏ) அணி.

✱ மாலை 4.30 மணி - ஒல்கோல்ஸ் வி.க. அணி எதிர் வடமராட்சி ஹொக்கி கழக அணி.

✱ ✱ ✱

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு -

*காலை 8.30 மணி-*

✱ 16வயதுப்பிரிவு - ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

✱ ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

✱ 18வயதுப் பிரிவு- இணுவில் இந்துக் கல்லூரி எதிர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்.

*பிற்பகல் 2.30 மணி*

✱ 16 வயதுப் பிரிவு - மயிலணி ம.வித்தியாலயம் எதிர் ஸ்கந்தவரோதய கல்லூரி.

இணுவில் மத்திய கல்லூரி எதிர் தாவடி இ.த.க.பாடசாலை.குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம் எதிர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம். (3-190)

## தாச்சிப் போட்டி

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான தாச்சிப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

24ஆம் திகதி சாவகச்சேரி நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும்-

மறுநாள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் போட்டிகள் நடைபெறும். (8-31)

# ஜேர்மன் விளையாட்டு நிபுணரின் தடகளப் பயிற்சி நேற்று ஆரம்பம்

## யாழ்ப்பாணத்தில் 10 தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.22

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தடகள ஆட்டங்களின் வீரர்களுக்கு பிந்திய தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி முகாம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

தடகள விளையாட்டு நிபுணரான ஜோகின் பிறின்ஸ் இந்தப் பயிற்சிகளை வழங்குகின்றார்.

வடக்கு -கிழக்கில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 32 தடகளப் பயிற்றுநர்கள் இந்த முகாமுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேற்று ஆரம்பமான இந்த முகாமில் 20 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றது.



ஜோகின் பிறின்ஸ்

காலையில் தடகளப் செயல்முறை பயிற்சிகளும் பிற்பகலில் கற்கை நெறி வகுப்புகளும் இடம் பெறும்.

விளையாட்டு விஞ்ஞானத்துறையிலும், தாவரவியலிலும் டாக்டர் பட்டம்பெற்ற ஜோகின் பிறின்ஸ் தடகள ஆட்டங்களில் பிந்திய தொழில்நுட்பம் குறித்து பயிற்சி வழங்குவார்.

யாழ்.மாவட்ட தடகளச் சம்மேளனம் இந்தப் பயிற்றி முகாமை ஏற்பாடு செய்துள்ளது. (3-203)

# பயிற்றுநர் ஜோகின் பிறின்ஸ் பாப்பாவைச் சந்தித்துப் பேச்சு




யாழ்ப்பாணம்,ஒக்.22

வடக்கு - கிழக்கு மாகாணத் தடகளப் பயிற்றுவிப்பாளர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கென வந்திருக்கும் ஜேர்மன் நாட்டு தொழில் ரீதியான தடகளப் பயிற்றுநர் ஜோகின் பிறின்ஸ் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் தமிழீழ தடகள சம்மேளனத் தலைவர் தெய்வேந்திரம், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர்.

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு மையத்தில் கடந்த புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது விளையாட்டுத்துறையில் நிலவும் பிரச்சினைகள் பற்றிக் ஜேர்மன் நிபுணர் கேட்டறிந்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய இடங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளுக்கு விளையாட்டு செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியுதவியை வழங்குவதாகவும் -

தடகள வீரர்கள் 10 பேருக்கு ஜேர்மன் தூதரகம் ஊடாக உதவிபுரிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (3-203)

## விளையாட்டு

# 'அஸ்ரா' வெற்றிக்கிண்ண கிரிக்கெட்: யாழ்.சென்றல் அணி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம்,ஒக்.22

'அஸ்ரா' கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கிடையில் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஓர் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின இந்த ஆட்டத்தில் -

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப்பெற்றது. எட்வேட் எடின், ஜெறிக்துசாந்ஆகியோர் முறையே 49, 15 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

செந்தூரன், சுஜீவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் தாயகன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

கிரிசோபன், பார்த்தீபன், செந்தூரன் முறையே 28, 14, 9 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். கரீஸ் மூன்று விக்கெட்டையும் கோகுலன் ஐந்து விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

நிலோயன், ஐதிக்துயாந், அனோநிதர்சன் ஆகியோர் முறையே 17, 62, 64 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். காந்தன் ஐந்துவிக்கெட்டுக்களையும் செந்தூரன் நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)



*தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 19வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணி தேசியமட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றது.*

*கடந்த 28வருடங்களின் பின்னர் இந்த வெற்றி யாழ்.மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளது.*

*அந்த அணியையும், பாடசாலை அதிபர் பிரதியதிபர், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (3-203)*

# விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரிக்கு கிளிநொச்சியில் அடிக்கல் நடப்பட்டது

## தமிழ்ப் பாடசலைகள் விளையாட்டு ஒன்றியத்தின் நிதி உதவியுடன்

கிளிநொச்சி,ஒக்.22

தமிழ்.பாடசாலைகளின் விளையாட்டு ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள வடக்கு -கிழக்கு விளையாட்டு விஞ்ஞான பாடசாலைக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கை ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் ம.மரிதாஸும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டு பிரதிநிதி திருமதி கீதா விஜயதேவாவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

இந்த விளையாட்டு விஞ்ஞானப் பாடசாலையை அமைப்பதற்கான அடிக்கல்லை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரனும் கிளிநொச்சி அரச அதிபர் சி.இராசநாயகமும் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் தமிழ் பாடசாலைகள் விளையாட்டு ஒன்றியத்தின் பிரதிநிதிகளான சற்குணசீலன், திருமதி சற்குணசீலன் ஆகியோரும் நட்டுவைத்தனர். (3-203)



*சர்வதேச சோட்டோக்கான் (SHOTOKAN) கராத்தே சங்கத்தினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 13ஆவது கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி உள்ளக அரங்கில் இடம்பெற்றது.*

*காராத்தே போட்டியில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கராத்தே மாணவர்களும் பயிற்றுநரும் இலங்கை கராத்தே தந்தை சிகான் பொனி றொபாஸுடன் (Shohan Bonnie Rob erts) காணப்படுவதை படத்தில் காணலாம். (3-190)*







*வடக்கு - கிழக்கு விஞ்ஞான விளையாட்டுப் பாடசாலையின் அடிக்கல் நாட்டு விழாவில் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் ம.மரியதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தேசியக் கொடியேற்றுவதையும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டு ஒன்றியத்தின் பிரதிநிதி சற்குணசிலன் பாடசாலைக்கான அடிக்கல் நடுவதையும் படங்களில் காணலாம்.*

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு விவரம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுத சுரபி யின் மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 18.10.2005ஆம் திகதி மாலை 6 மணியளவில் கிராமசேவையாளர் திரு.ஆ.கி.சிவசண்முகம் அவர்களின் தலைமையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதிர்ஷ்டசாலிகளின் இலக்க விவரங்கள். முதலாம் பரிசு - 013, இரண்டாம் பரிசு - 018, மூன்றாம் பரிசு - 3111

| | | | |
|---|---|---|---|
| ஆறுதல் | 1ஆம் பரிசு - 2674 | 5ஆம் பரிசு - 468 | 9ஆம் பரிசு - 1554 |
| பரிசுகள்: | 2ஆம் பரிசு - 585 | 6ஆம் பரிசு - 3223 | 10ஆம் பரிசு - 714 |
| | 3ஆம் பரிசு - 3539 | 7ஆம் பரிசு - 730 | |
| | 4ஆம் பரிசு - 2381 | 8ஆம் பரிசு - 3353 | |

மேற்படி அதிர்ஷ்டசாலிகள் தமக்குரிய பரிசுப் பொருள்களை ஆலயத்தில் உள்ள எமது அன்னதான மடத்தில் பற்றுச்சீட்டைக் காண்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ.தனபாலசிங்கம், தலைவர்.

(41733)(32-46-45-15)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, இராஜபாதைக்கு அருகில் பொலீஸ் நிலையத்துக்கு அருகில் 4½ பரப்புக் காணி உடன் விற்னைக்குண்டு. தொடர்பு: (P.M. 4மணிக்குப் பின்னர்) 53/1 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

1733)(26-32-15-45)




மங்கல நாளாம் பார்த்திப
வருஷம் ஐப்பசித் திங்கள்
இன்றைய நாளில்
திருவளர் செல்வன்
சஞ்ஜீத் தன்னுடன்
திருவளர் செல்வி
தர்சினியாரும் சீருடன்
இணைந்து வாழும்
நாளில் பார்புகழ்
பதினாறு
பேறும் பெற்று
நகமொடு சதையென
இணைபிரியாது
இன்பத்தோடு இனிதே
வாழ தேனிலும்
இனிமையாய்
வாழ்த்துகின்றோம்

கோண்டாவில்,
கல்வயல் நண்பர்கள்.

## டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை


யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவையினரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூர்த்திசெய்து எதிர்வரும்7ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-202)

## ஓராண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 19 - 09 - 1929 |  | 02 - 11 - 2004 |

### அமரர் குமாரசாமி அருளானந்தம்

(Retired District and Magistrate Courts REGISTRAR, J.P)

திதி: 22.10.2005

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எம்மை ஆளாக்கி
தேசம் புகழ வைத்த தெய்வமே!
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறாது உம் நினைவு

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(41738)(32-15-45)




இலங்கை வங்கியின் 14 Plus சேமிப்பு கணக்கு திட்டமானது இன்றைய வளரும் பிள்ளைகளுக்கு சேமிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதாகும். அதே நேரம், உங்கள் பிள்ளைகளின் அவசரத்தேவைகளுக்கான பண மீளப்பெறுதலுக்கு

Visa Electron Card ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

இன்றே அருகில் உள்ள இலங்கை வங்கியின் கிளைக்கு சென்று 14 Plus கணக்கை ரூபா. 3000/- செலுத்தி ஆரம்பியுங்கள்.


கையிருப்பு (Cap) முடியும் முன் முந்துங்கள்.

*விதிமுறைகளுக்கமைய

BOC
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# தமிழீழத்தின் தலைநகர் திருமலையை தட்டிப் பறிக்கும் சிங்களப் பேரினவாதம்

*திருகோணமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது. அதனையொட்டி நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் எழுதிய இக் கட்டுரை பிரசுரமாகின்றது.*



ஈழம்தான் முடிந்த முடிவென வட்டுக் கோட்டையில் விட்டுக்கொடுக்காது எடுத்த தீர்மானத்தை 29 ஆண்டுகள் கழிந்த நிலையில் மீண்டும் நினைவுபடுத்தும் முறையில் வடக்கின் எல்லையாம் வயல் செறிந்த வவுனியாவில் தமிழீழக் குரலை மீண்டும் எழுப்பினோம். வவுனியாவை அடுத்து மீன்பாடும் தேன்நாட்டில், முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் பிறந்த மண்ணில், கவிஞர் காசி ஆனந்தனை பெற்றெடுத்து பெருமை கொள்ளும் மட்டக்களப்பு மண்ணில் எல்லோர் மனம் கவரும் முறையில் தமிழீழ எழுச்சி மாநாடு நடைபெற்றது.

அடுத்து வன்னியில் எம் எழுச்சிப் பேரவையைக் கூட்டி வையத்தை நோக்கி குரலெழுப்பினோம். எம் இனத்தின் தொல்லை தீர முல்லையில் முழங்கினோம். 1983 ஜூலையின் 13 சிங்களப் படைவீரர்களைச் சாகடித்து வரலாற்றில் ஒரு திருப்புமுனையை, ஏற்படுத்தி தன்னை அர்ப்பணித்த முல்லை மைந்தன் செல்லக்கிளியை, நாம் மறப்பதற்கில்லை. அந்த மண்ணில் இருந்துதான் ''இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது வாழும்'' எம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எம்மை வழி நடத்துகிறார்.

முல்லையிலிருந்து புறப்பட்ட நாம் மாதோட்ட நன்நகரை நாடி 'கேடினை நீக்கும் கேதீசுவரனை' வழிபட்டு 'மடுமாதாவின் அரவணைப்பினையும்' பெற்று 'அல்லல் தீர்க்க அல்லாவை அழைத்து' நாம் நடத்திய மாநாடு எம் எதிர்பார்ப்பை விட மாபெரும் வெற்றியை எமக்கு ஈட்டித்தந்தது.

முத்து விளையும் மன்னாரிலிருந்து புறப்பட்ட நாம் தமிழீழத்தின் பண்பாட்டுத் தலைநகரம் யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர் 30 இல் ஒன்று கூடினோம்.

### திருமலைத் தீர்மானம் திருப்புமுனையாக அமையட்டும்!

மேற்குறித்த மாநாடு எல்லாம் எமது சிந்தைக்கு நிறைவுதரும் முறையில் அமைந்திருந்த போதும் தோன்றவிருக்கும் தமிழீழத்தின் தலைநகராக விளங்கப் போகின்ற திருகோணமலையில் நாம் ஓங்கி ஒலித்தால்தான் உலகம் எம் குரலுக்கு முழுமையாக செவிசாய்க்கும் என்ற நம்பிக்கையில் இன்று சனிக்கிழமை வரலாற்றை மாற்றி அமைக்கின்றவொரு திருப்பு முனையை ஏற்படுத்துகின்ற மாநாட்டினைக் கூட்ட இருக்கின்றோம். இம் மாநாட்டில் கட்சி கடந்த நிலையில், மதம் கடந்த நிலையில், மாகாணம் கடந்த நிலையில் அனைத்து தமிழ் மக்களும் ஒன்று கூடுவது உறுதி.

திருமலை வெறும் சாதாரண மண்ணல்ல. 'குரைகடல் ஓதும் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையில்' குடிகொண்டுள்ளவன் கோணேசன். அக்கோணேசனை நினைவு கொள்கின்ற போது 'கோணமலை காணாத கண் என்ன கண்ணே கும்பிட்டு நில்லாத கை என்னே கையே' என்று பைந்தமிழில் எழுந்த பக்தி மூழ்கிய குரல் எமக்கு நினைவிற்கு வருகிறது. கோணேசன் கோயிலை எண்ணிப் பார்க்கின்ற போது 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த - தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் என 50 இடங்களிலும், தமிழின் பெருமையை 500 இடங்களிலும் பாடிய - ஞானசம்பந்தனின் பின்வரும் சொற்றொடர் நினைவிற்கு வருகிறது.

கோணமாமலை எழுந்துள்ள கோணேசனை 'தம் தாயினும் நல்ல தலைவன் எம் வாயினும் மனத்தும் மருவிநின்று அகலாத மாண்பினன்' என்று மெய்மறந்து பாடும் இவர், திருமலையில் 7 ஆம் நூற்றாண்டில் வேற்றினத்தவர்க்கு இடம்கொடுக்காது, தமிழன் நெருங்கி வாழ்ந்த வரலாற்றினை 'குடிதனை நெருக்கி பெருக்கமாய் வாழ்ந்த கோணமாமலை' என நெஞ்சு நிமிர்ந்து பாடுகிறார். இன்றோ தமிழன் அம்மண்ணிலிருந்து நெருக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறான். 'புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி' என்ற குரலோடு 'தமிழன் மரணம் கச்சாமி' என்ற குரலும் அங்கு ஒலிக்கின்ற போது எம் உள்ளம் வேதனையால் வெம்புகிறது. ஆயிரங்கால் மண்டபமுடையது கோணேசர் கோயில் என்பது வரலாறு தருகின்ற வளமான செய்தி. இக் கோணேசர் கோட்டைக்குள் புத்தர் சிலை எழுப்பப்பட்டுள்ளது. பௌத்த கோயில் கட்டப்பட்டுள்ளது. பாவத்தை நாசமாக்க தமிழன் கட்டிய பாவநாசக் கேணியை இன்று சிங்களவர்கள் தம்பாவத்தை கட்டியணைக்கும் கேணியாக மாற்றியுள்ளார்கள். அத்தோடு குப்பை கூழங்கள் நிறைந்த கேணியாகக் காட்சியளிக்கிறது. தமிழன் கட்டிய இக்கோயிலை தமிழன் சென்று வழிபட இன்னும் தடைகள் பல தொடர்கின்றன. ஒரு காலத்தில் இசைவுச் சீட்டு பெற்றுச் செல்லும் நிலையிலிருந்தது. இக்கோயிலின் வாசல்வரை தரைப்படையும் கடற்படையும் செல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழனுக்கு வாசல் வரை செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## தடுத்து நிறுத்துவதற்கு தமிழர் திரள வேண்டும்

### குளக்கோட்டன் கட்டிய கந்தளாயைக் காப்பாற்றுவோம்

இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற முறையில் அண்மையில் திருமலையில் மூலை முடுக்குகள் எங்கும், அரச மரம் இருப்பினும், இல்லாதவிடத்திலும் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. திருமலை பேருந்து நிலையத்தில் பெரியதொரு புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. சிங்களவர்களை மிஞ்சுகின்ற நிலையில், புத்தரின் பெருமைகளை உணர்ந்தவர்கள் நாம். சீத்தலைச்சாத்தனார் சாற்றிய 'மணிமேகலை' இதற்கு சான்று கூறும். கவிமணி அவர்கள் எழுதிய 'ஆசிய ஜோதி' எம்கூற்றிற்கு அரணாக அமைகிறது. தமிழ் நாட்டு அரசின் பரிசைப் பெற்ற வெங்கடசாமி நாட்டார் எழுதிய 'புததமும் தமிழும்' என்ற நூல் புத்தர் புகழ் பாடுகின்றது. 'புவிக்கு புது வழி காட்டிய புத்தர்' என அரசு வெளியிட்ட ஸ்ரீலங்கா இதழில் 1956 இல் நாம் புத்தரைப்பற்றி வரைந்த கட்டுரை புத்தர் எமது உள்ளத்தில் எவ்வளவு தூரம் குடிகொண்டுள்ளார் என்பதற்கு சான்று கூறும். ஆனால், இந்த மாசுமறுவற்ற புத்தரின் சிலை திருமலை பேருந்து நிலையத்தில், மலசலகூடத்திற்கும் இறைச்சிக் கடைக்கும் அருகில் மாசு படிந்த சூழலில் நிறுவப்பட்டுள்ளது.

வெறிக்கு விளக்கமில்லை வெறியாட்டம் தொடர்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக கந்தளாய்க் குளத்திலும் பௌத்த சிங்கள வல்லாண்மை கண் வைத்துள்ளது. கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன் என்பதை நாடும் அறியும்; நானிலமும் அறியும். 18 ஆம் நூற்றாண்டில் திருமலையில் ஆட்சி செய்த ஆளுநராகிய வென்சன்டன் (BensonDan) எனும் ஒல்லாந்தர், தனது நாட்டுக் குறிப்பில் 'கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன்' என்று தெட்டத் தெளிவாக எழுதியுள்ளார். ஆனால், வரலாற்றை திரித்துக் கூறுவதில் கைதேர்ந்த சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கந்தளாயைக் கட்டியவர் அநுராதபுத்தை 7 ஆம் நூற்றாண்டில் ஆண்ட 2 ஆம் அக்ரபோதி மன்னன் என்று வரைந்துள்ளனர். இதை அடிப்படையாக வைத்து 9 ஆம் வகுப்பிற்குரிய தமிழ் வரலாற்று நூலிலும் இதே குறிப்பு காணப்படுகிறது. இதன் விளைவு வரலாறு பயில்கின்ற மாணவ, மாணவிகள் பிழையாக வழி நடத்தப்படுகின்றனர்; பொய் மெய்யாக்கப்படுகின்றது.

அண்மையில் கந்தளாய் குளத்திற்கு முன்பாக அக்ரபோதி மன்னனின் சிலை எழுப்பப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக நாமறிகிறோம். அத்துடன் கந்தளாய்க் குளத்திற்கு அருகில் அக்ரபோதி மன்னன் பெயரில சிங்களப் பாடசாலை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை 3 போக விளைச்சல் உள்ள பூமி. இந்த வளமான பூமியையா நாம் இழப்பது? என்று கண் கலங்கிய நிலையில் தந்தை செல்வா எனக்கு நேரில் கூறியதை இங்கு நினைவு கூருகின்றேன். திருகோணமலையில் சீனித் தொழிற்சாலை, கனிப்பொருள் (இல்மனற்) தொழிற்சாலை ஆகியவையும் உண்டு. அடுத்து வெவ்வேறு தட்ப, வெட்ப நிலையில் உள்ள 7 வெந்நீர் ஊற்றுக்கள் திருமலையில்தான் உண்டு. இவை குறித்து தமிழ் மண்வளம் பாடிய தமிழ்த்தாத்தா சோமசுந்தரப்புலவர் பாடிய பாடல்கள் அழியாவரம் பெற்றவை. மீனவர்கள் வாழ்வுபெற கடல் வளமும் இங்குதான் உண்டு. சுருங்கக் கூறின் திருமலையில் நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு, கடல்வளம் உண்டு, தொழில்வளம் உண்டு இவை அனைத்திற்கும் மேலாக கோணேசரின் அருள் வளமும் உண்டு.

### இந்துமா சமுத்திரத்தின் திறவுகோல் திருமலை

திருகோணமலையில்தான் உலகின் தலைசிறந்த துறைமுகமும் உண்டு. இவ் உண்மையை நினைவு கொண்டுதான் 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய பேரரசின் தலைமை அமைச்சராக விளங்கிய பெருந்தகை வெலிங்டன் (Loard Wellington) பின்வருமாறு திருமலை துறைமுகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றார். ''Man who holds Trincomalee holds the key to the Indian ocean '' (எவன் திருகோணமலையை வைத்திருக்கிறோனோ அவன் இந்துமா சமுததிரத்தின் திறவுகோலை வைத்திருக்கிறான்). திருகோணமலையின் சிறப்பினை உணர்ந்துள்ள எம் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை மேலும் ஒரு படி சென்று ''Lose Colombo and gain Trinco '' (கொழும்பை இழ, திருகோணமலையைப் பெறு) என்று கூறினார்.

நாம் அடுத்தடுத்து கூறிவந்த முக்கியத்துவம் நீங்கலாக வடக்கு - கிழக்கை இணைக்கின்ற இணைப்புப் பாலமாக - கேந்திரஸ்தானமாக விளங்குவது திருகோணமலை. திருகோணமலையை நாம் எந்தநிலையிலும் இழப்போமாயின் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்படும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)


மக்கள் பலத்தில்...
உதயன்
20 ஆண்டு சேவைப் பூர்த்தியை முன்னிட்டு
அகில இலங்கை மட்டத்திலான
சிறுகதைப் போட்டி

போட்டி நிபந்தனைகள்

* சிறுகதைத் துறையில் ஆர்வமுள்ள நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவராக இருப்பினும் ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
* இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு வயதுக்கட்டுப்பாடு எதுவும் இல்லை.
* ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், அவை தனித்தனியான கடித உறையில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* சிறுகதைகள் A4 அளவுத்தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுகதையும் A4 அளவுத்தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படலாகாது.
இது ஒரு திறந்தபோட்டியாகும். எழுத்தாளர்களின் கற்பனைத் திறனுக்கேற்ற வகையில் சிறுகதைகள் அமையலாம். சிறுகதைகள் சமகால சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி, தாக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அமைதல் விரும்பத்தக்கது.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளை மீளப்பெற்றுக்கொள்ள இயலாது. பரிசுக்குரிய சிறுகதைகள் இதற்கென நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும்.
சிறுகதைகள் முற்றிலும் கற்பனைக் கண்ணோட்டத்தில் அமைவனவாயிருத்தல் வேண்டும்.
* தனிப்பட்ட சம்பவங்களை அல்லது தனிப்பட்ட நபர்களை விமர்சிப்பவையாக அமைதல் ஆகாது.
தெரிவுசெய்யப்படும் முதல்மூன்று சிறுகதைகளுக்கும் கீழ்க்காணும் வகையில்
* பரிசில்கள் வழங்கப்படும்.



முதலாவது பரிசு : தங்கப்பதக்கமும் 10,000 ரூபா பணமும்
இரண்டாவது பரிசு : தங்கப்பதக்கமும் 5,000 ரூபா பணமும்
மூன்றாவது பரிசு : 5,000 ரூபா

* பிரசுரத்துக்குத் தகுதியானவையாகக் கருதப்படும் சிறுகதைகள் உதயனிலும் எமது சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியிலும் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எந்தவொரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ பிரசுரிக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏற்கனவே வானொலியில் ஒலிபரப்பான, இணையத்தளத்தில் வெளிவந்த சிறுகதைகளை அனுப்புதல் ஆகாது. அவை கிடைக்கப்பெறின் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
* போட்டிக்குரிய சிறுகதைகளை எதிர்வரும் **நவம்பர் 25ஆம்** திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக

உதயன்
20 ஆவது ஆண்டு சிறுகதைப்போட்டி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
* ''உதயன்'',சுடர்ஒளிப் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.
* போட்டி தொடர்பான சகல தீர்மானங்களிலும் பிரதம ஆசிரியரின் முடிவே இறுதியானது.

IOM International Organization for Migration

## IOM நிறுவனம் யாழ்ப்பாணம்

## கேள்விப் பத்திரம் கோரல்

எமது நிறுவனம் 800 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 700 தற்காலிக வீடுகளை அச்சுவேலி, கற்கோவளம் ஆகிய இடங்களில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. வேலைக்குத் தேவையான மூலப் பொருள்கள் யாவும் எமது நிறுவனத்தால் வழங்கப்படும். மேற்படி வீடுகளை அமைப்பதில் ஆர்வமுள்ள, தேர்ச்சிபெற்ற, பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இவ்விண்ணப்பங்கள் யாவும் சுயவிலாசமிடப்பட்ட விவரங்களுடன் இம்மாதம் 27, 28-10-2005 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 - 1.00 மணிவரையில் நேரில்வந்து கையளிக்கவும். அத்துடன், மாதிரி வீட்டு வரைபடம் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள், ஆலோசனைகளை எமது அலுவலகத்தில் மேற்குறித்த தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைமைப் பொறுப்பதிகாரி,**
**IOM நிறுவனம்,**
**70, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(41730)(46-45-19-24)

## யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.22

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் யூனியன் சிறப்பு மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாகப் பழைய மாணவரான பொறியியலாளர் செ.பத்மநாதன், தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பரிசில்களைத் திருமதி தவமணி விக்னேஸ்வரன் வழங்கிக் கௌரவிப்பார்.

(3-202)

## ஆரம்பக் கல்வி ஆசிரியர் கருத்தரங்கு நாளை

வலி.தெற்கு ,ஒக்.22

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் 26ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இக்கருத்தரங்கின்போது புதிய ஆலோசனைகள், கற்பித்தல் வழிகாட்டிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

அத்துடன், 2006 ஆம் ஆண்டுக்குரிய கற்றல் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலை துளசிபுரத்தில் அமைந்துள்ள மனிதவள அபிவிருத்தி மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (3-152)

IOM International Organization for Migration

## IOM நிறுவனம் யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

மீளமைப்புத் திட்டத்துக்கான களஞ்சியப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடம் (தற்காலிகம்)

### இடம்: அச்சுவேலி, பருத்தித்துறை

மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள எமது களஞ்சியங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேண்டப்படும் தகைமைகள்:**

- க.பொ.த.(சா.த) வரை கற்றிருத்தல் வேண்டும்
- வயதெல்லை 21-55 வரை
- சிறந்த தேக ஆரோக்கியம் அவசியம்
- முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

*விண்ணப்பங்கள் அனைத்தையும் 27-10-2005 இற்கு முன்னர் கிடைக்கத்தக்க வகையில் சுயவிவரங்களுடன் கீழ்வரும் முகவரியில் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும்.*

*கோப்பாய், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*தகுதியான விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

**தலைமைப் பொறுப்பதிகாரி,**
**IOM நிறுவனம்,**
**70, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(41731)(46-45-19-24)

# INVITATION TO BID

## Extension of Bidding Time

### School Buildings and Infrastructure Reconstruction Programme

**Funded by UNICEF**
for the Ministry of Education of the Democratic Socialist Republic of Sri Lanka:

CONSTRUCTION OF TWO SCHOOLS:
LOT 1: SILLAWATHI HBTMS SCHOOL AT MULLAITIVU (Project No SLO1P1-0301/ Contract No SLO1C1-0301)

LOT 2:VALAYANMADAM GTMS AT MULLATIVU
(Project No SLO1P1-0302/ Contract No SLO1C1-0302)

1. A Memorandum of Understanding between the Government of Sri Lanka and UNICEF has been signed to rehabilitate the School Infrastructure in the areas affected by the Tsunami on 26th December 2004. UNICEF has consented to provide assistance to the Ministry of Education of GOSL for the reconstruction of schools damaged by the Tsunami. The implementation partner of UNICEF is the United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility.
2. The United Nations Office for Project Services - Sri Lanka Project Implementation Facility, herein after referred as "UNOPS", invites sealed bids from the eligible bidders for the school building given below:

| Contract No. | Project No. | Project Name |
|---|---|---|
| SLO1CI -0301 | SLO1P1-0301 | Sillawathai HBTMS, Mullaitivu |
| SLOICI-0302 | SLO1P1-0302 | Valayanmadam GTMS, Mullivaikkal, Mullaitivu |

3. All bidders shall have the following qualifications irrespective of whether they apply independently or as a joint venture with an eligible bidder:
   (a) Registration in the field of Building Construction in grade **M3 or above**, at the Institute for Construction Training & Development (ICTAD), and
   (b) Member of the National Construction Association of Sri Lanka (NCASL).
4. Additional information and Bidding Documents will be available at the office of the Chief Technical Advisor of UNOPS at No 17, Park Avenue, Colombo 5. A non-refundable fee of Rs 10,000 is required at the time of collection of Bid documents of each School.
5. Bidding documents will be issued following receipt of written applications from eligible bidders until the 25th Oct 2005.
6. This Invitation to Bid shall close at 2 pm on 28th Oct 2005 at UNOPS office, 17 Park Avenue, Colombo-5. AII bids must be addressed to **The Country Coordinator of UNOPS Sri Lanka Project Implementation Facility** and accompanied by a Bid Se- curity in the prescribed format.
7. UNOPS Sri Lanka Project Implementation Facility will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids.

**Country Coordinator**
**UNOPS Sri Lanka Project Implementation Facility** (C/45851) (24)

# INVITATION TO BID

## Extension of Bidding Time

Health Infrastructure Development Program funded by World Vision Lanka for the Ministry of Health of the Democratic Socialist Republic of Sri Lanka :

## Construction of Gramodaya Health Centers:

1. Memorandum of Understanding between the Government of SriLanka and the World Vision Lanka has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004. The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Health and World Vision Lanka.
2. The United Nations Office for Project Services - Sri Lanka Project Implementation Facility herein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders

**with ICTAD Grading M6 and above for the Construction of Gramodaya Health Centers at locations given below:**

| District | Location | Bid Bond | Bid Document Issues & Collection |
|---|---|---|---|
| Lot 1 Mullaitivu | 1. Kompaveli<br>2. Palinagar<br>3. Therangandal | 50,000/-<br>50,000/-<br>50,000/- | UNOPS<br>230, Thirunagar South,<br>Killinochchi<br>Te1:0212285729 |

5. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of non-refundable fee of Rs 3,000.00. Bidding documents will be issued to eligible bidders from 9.30 am to 5.00 pm on working days until the **25th October 2005** at the relevant area offices indicated above and at UNOPS-SLPIF in Colombo at 17 Park Avenue, Coombo5. **Contractors with ICTAD Grading M4 and above may submit complete Bids (Lot 1) or partial bids per Lot, provided full BOQs are submitted for each location. Contractors with Grading MS and below can ONLY submit partial bids per Lot - i.e. individual projects only and will not be considered for packages (Lots).**
6. All bids must be accompanied by a Bid Security in the prescribed format and must be delivered to UNOPS at the relevant Area Offices indicated above before 2.00 p.m. on 28th October 2005. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.
7. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

**Country Coordinator**
**UNOPS- SLPIF**

(C/45852) (24)

# இனவாத அரசியலின் புதிய வடிவம் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்

## சந்திரசேகரன் எம்.பி.காட்டம்

கொழும்பு, ஒக்.22

இனவாத அரசியலுக்குப் புதிய வடிவம் கொடுத்துள்ளது மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகத் தைரியம் இருந்தால் தமிழ் மக்களிடம் மட்டும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்திப் பாருங்கள் என்றும் அவர் சிங்களத் தலைமைக்குச் சவால் விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஓர் இனம் செறிவாகவும் தனித்துவத்தோடும், தனியான கலை, கலாசார, பாரம்பரியங்களோடும் பல தலைமுறைகளாக வாழ்ந்தால், அப்பிரதேசத்தை அங்கு வாழும் மக்களின் தாயகமாகக் கொள்ளவேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபையே தனது சாசனத்தில் ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தகைய தாயகத்திற்கு உரிமைகோருகின்ற சகல தகுதிகளும் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு உண்டு என்பதே வரலாறு காட்டும் உண்மை.

மஹிந்த தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டையே தகர்க்க நினைப்பது தமிழ்ச் சமூகத்தின் ஆணிவேரை ஆட்டிப் பார்க்கின்ற அகோரத்தனமாகும்.

ஒரு நாட்டுக்குள் இன, மொழி, பிரதேச, புவியியல் அமைப்பு ரீதியாகப் பல ஆட்சி முறைகளைச் 'சமஷ்டி' என்ற பெயரில் உலக நாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதனால் இனங்களுக்கிடையே ஐக்கியமும், பரஸ்பர புரிந்துணர்வும் ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவத்தை மதிக்கின்ற தன்மையும் மேலோங்கி இருப்பதோடு ஒட்டுமொத்தமாக ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை இறுக்கமாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதே நடைமுறையாகும்.

ஆனால், அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் போராடிவரும் தமிழ் இனத்தை ஒற்றை ஆட்சிக்குள் பலாத்காரமாகக் கட்டிப்போட நினைப்பது, தமிழர்கள் சரணாகதி அடைந்துவிடவேண்டும். அடங்கிப் போகவேண்டும் என்ற மஹிந்தவின் ஆணவத்தின் அடையாளமாகவே வெளிப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்பது உச்சக்கட்டமான கோமாளித்தனமாகும். சனத்தொகையில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக அதிக விகிதாசாரத்தில் இருக்கும்போது தமிழர்களுக்குச் சாதகமான ஆணையைப் பெரும்பான்மை மக்களிடம் இருந்து எப்படி எதிர்பார்க்க முடியும்? இவர்களுக்குத் தைரியம் இருந்தால் தமிழ் மக்களிடம் மட்டும் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்திப் பார்க்கட்டும். அப்படி நடந்தால் தனி நாடுதான் தமக்குள்ள ஒரே தீர்வு என்பதை தமிழர்கள் ஒட்டுமொத்தமாக தடுமாற்றமின்றி வெளிப்படுத்துவார்கள்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்திற்காக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் பொதுக் கட்டமைப்பையும் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்திருப்பது மனிதாபிமான உணர்வுகளோடு கூட தமிழ் மக்களைக் கவனிக்கின்ற இதயம் இல்லாதவர் அவர் என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இந்தப் போக்குக்கெல்லாம் காரணம் மஹிந்த ராஜபக்ஷ இனவாத அமைப்புகளின் கைபொம்மையாக ஆகிவிட்டிருப்பதும் பதவி மோகத்தின் உச்சத்தில் இருப்பதுமேயாகும்.

உலகத்தின் கவனம் பதிந்துள்ள வடக்கு - கிழக்கு அரசியல் பிரச்சினைக்கே இந்தக் கதியென்றால் தேர்தலில் இவர்கள் வெற்றி பெற்றால் மலையக மக்களின் தலைவிதி எதில் போய் முடியும் என்ற நியாயமான அச்சம் சகல மலையக மக்களுக்கும் ஏற்படவே செய்யும்.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகத் துணைபோகின்ற, மலையகத் தமிழர்களாகத் தம்மைக் கூறிக்கொள்வோர், மலையக சமூகத்தின் துரோகிகளாகவே வரலாற்றில் அடையாளப்படுத்துப்படுவார்கள்- என்றுள்ளது. (க-3)

## 4 கிராம் ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை

கொழும்பு,ஒக்.22

நான்கு கிராம் ஹெரோயினை வைத்திருந்த குற்றம் நிரூபிக்கப்பட்டதால் நபரொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த லக்ஷ்மன் ஜயவீர என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.2000ஆம் ஆண்டில் இவர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். சட்டமா அதிபர் இவருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் நீதிபதி இவருக்கு நேற்றுமுன்தினம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (க-3)

## பைஸர் முஸ்தபாவை ஐ.தே.கட்சியில் சேர்க்கக் கூடாது என்கிறது இ.தொ.கா.

### ரணிலிடம் ஆறுமுகன் தெரிவித்தாராம்

கொழும்பு, ஒக்.22

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அதிருப்தியாளராகக் கருதப்படும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதியமைச்சருமான பைஸர் முஸ்தபாவை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்ளக் கூடாதென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததையடுத்து அதுவரை அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்ற இ.தொ. காங்கிரஸ், அரசில் தனது உறுப்பினர்கள் வகித்து வந்த அமைச்சுப் பொறுப்புக்களையும் ராஜினாமா செய்ய வைத்தது.

ஆனாலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் பிரதியமைச்சுப் பொறுப்பு வகித்த பைஸர் முஸ்தபா, தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்யவில்லை. எனினும், இ.தொ.காங்கிரஸின் தலைமை எடுத்த முடிவிற்கமைய அவரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணிலுக்கே தமது ஆதரவை வழங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பைஸர் முஸ்தபா ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதை இ.தொ. காங்கிரஸின் தலைமை விரும்பவில்லையென்றும், அவரை இணைத்துக் கொள்ள வேண்டாமென ஐ.தே.க. தலைவரிடம் இ.தொ.கா தலைவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் எனவும் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறின.

இ.தொ.காங்கிரஸ் தலைவரின் இந்த நிலைப்பாடு பற்றி ஐ.தே.க. தலைவர் தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளார் என்றும் தெரிகிறது.

இதற்கிடையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களை நன்கு ஆராய்ந்து வருகிறேன். இன்னும் ஓரிரு தினங்களில் சரியான முடிவை எடுப்பேன். எனது அரசியல் எதிர்காலத்தை எனக்கு வாக்களித்த மக்கள் தீர்மானிப்பர்.

-இவ்வாறு நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் கருத்துத் தெரிவித்தார் இ.தொ.காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும், சுற்றுலாத்துறை பிரதியமைச்சருமான பைஸர் முஸ்தபா. அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த பொதுத் தேர்தலின்போது கண்டி மாவட்டத்திலுள்ள கணிசமான முஸ்லிம்கள் இ.தொ.காங்கிரஸிற்கு வாக்களித்துள்ளனர். அந்த மக்களின் அபிலாஷைப்படி நான் செயற்படுவேன். ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்ற முடிவை நான் சரியாகத் தீர்மானிப்பேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் நான் இணையப் போகிறேன் என வெளிவரும் தகவல் தவறானவை.

- இவ்வாறு கூறினார் பைசர் முஸ்தபா. (க-3)

## தமிழீழத்தின் தலைநகர்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**It will brake the contiquity of the Tamil territory** என்று எம் நிலையை விளக் கலாம்.

### குடித்தொகைக் கணக்கு சுத்திக் காட்டும் உண்மை

1898 இல் திருமலையில் துணை அரசமுகவராக விளங்கிய சி.எம்.லுசின்டன் **(C.M.Lushington)** இலங்கையில் எந்தப் பகுதியிலும் சிங்களவரைக் காணாது இருக்க முடியாது. ஆனால், திருமலையில் மட்டுதான் சிங்களவர் எவரையும் காணாது நாம் வாழ முடியும் - என்றார். 1898 இல் கூறப்பட்ட கூற்று இது. ஆனால், ஒவ்வொரு பத்தாண்டும் நடைபெறுகின்ற குடித்தொகை மதிப்பீடு நம்மைப் படுகுழியில் அல்லவ வீழ்த்தியுள்ளது. இஸ்லாமிய உடன் பிறப்புக்களின் எண்ணிக்கையோடு எம் எண்ணிக்கையையும் சேர்க்கும் போதுதான் நாம் தப்பிப் பிழைக்க வாய்ப்புண்டு. இன்று விகிதாசார அடிப்படையில் மக்கள் தொகை பின்வரும் முறையில் அமைகிறது. தமிழர் - 36, சிங்களவர் - 31, இஸ்லாமியர் - 33.

### சிங்களமயமாகிறது திருமலை!

தமிழர் தாயகக் கோட்பாட்டை முறியடிக்கும் முறையில்தான் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளின் சிந்தனையும் செயற்பாடுகளும் அமைந்தன. டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா, சி.பி.டி.சில்வா, காமினி திசநாயக்க ஆகியோர் கூறிய கூற்றுக்கள், விடுத்த அறிக்கைகள், எழுதிய கடிதங்கள், குறிப்புக்கள் ஆகியவற்றை ஒட்டி ராஜன் கூல் **(Rajan Hoole)** தான் எழுதிய "Sri Lanka The Arrogance of Power myths, Decadence & Murder" என்ற நூலில் (இலங்கையில் நிலவும் - அதிகாரமும், அகங்காரமும், கட்டுக் கதைகள், வீழ்ச்சியும் சாகடிப்பும்) பக்கம் 194 தொடக்கம் 198 வரை **"The Tamil Home- land Question"** (தமிழர் தாயகம் பற்றிய கோட்பாடு) **"Smashing the Tamil Homeland"** (தமிழர் தாயக கோட்பாட்டை சிதறடித்தல்) **"Scholars and the Tamil Homeland"** (தமிழர் தாயகக் கோட்பாடு பற்றி அறிஞர்கள் கருத்து) **"The Red Her ng of Anuent Possession"** (தொன்மை உடைமை பற்றிய அறிஞர்களிடையே நிலவும் கருத்து மோதல்கள்) ஆகிய தலைப்புகளில் வரைந்துள்ள கருத்துக்கள் எமது ஆழ்ந்த சிந்தனைக்குரியவை. ராஜன் கூல் விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர். தமிழர் எதிர்காலம் எவ்விதம் அமையவேண்டும் என்பது பற்றித் தெளிவோடு சிந்திக்கிறாரா என்பது கேள்விக்குறி. எனினும், தமிழர் தாயகக் கோட்பாடு பற்றி தெளிவோடு சிந்தித்து அவர் தரும் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை.

திருமலையைத் திட்டமிட்டுப் பறிக்கும் முயற்சி டி.எஸ்.சேனநாயக்காவின் காலத்திலேயே உருவாகியது என்பதற்குச் சான்றுகள் பலவற்றைத் தருகிறார். தமிழனின் நிலத்தைப் பறிக்கும் கோட்பாட்டில் டி.எஸ்ஸிக்கும் டட்லிக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்க வில்லை. ஆதியில் தமிழ் மரபில் தோன்றிய சி.பி.டி.சில்வாவுக்கு சிங்கள குடியேற்றத்தை வெற்றிகரமாக நடத்தியதில் பெரும் பங்குண்டு என்பதை கூறுகிறார். மலையகத் தமிழ்மக்கள் இனப்படுகொலை காரணமாக வெளியேற்றப்பட்டு திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளில் குடியேற்ற முயன்ற போது தடுக்கும் வெறியாட்டத்தில் காமினி திஸநாயக்கவின் போக்கை நூலாசிரியர் வன்மையாய்க் கண்டிக்கிறார். அத்தோடு தொண்டமான், அகதிகளாக்கப்பட்ட இம் மக்களுக்காகக் குரலெழுப்பி காமினி திஸநாக்காவோடு மோதிய வரலாறும் நூலில் இடம்பெறுகிறது. கல்குடாவில் சிங்களவர்களைக் குடியேற்ற காமினி முயன்றபோது ஐக்கிய தேசிய கட்சியில் ஐக்கியப்பட்டிருந்த தேவநாயகம் கொதித்தெழுந்த காட்சி இங்கு குறிப் பிடப்படுகிறது.

காந்திய இயக்கத்தின் தலைவர் டாக்டர் ராஜசுந்தரம், இவ் இயக்கத்தின் செயலாளர் கட்டடக் கலைஞர் எஸ்.ஜே.டேவிட் ஆகியோர் மலையக மக்களுக்காக வாழ்வு கொடுக்க முயன்ற முயற்சிகளையும் பட்ட துன்பங்களையும் குறிப்பிடும் இந்நூலாசிரியர், வெலிக்கடைச் சிறையில் டாக்டர் ராஜசுந்தரம் கொலை செய்யப்பட்டதையும் மட்டக்களப்பு சிறையிலிருந்து பல ஆபத்துக்களின் மத்தியில் டேவிட் தப்பியோடிய நிகழ்ச்சியும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம் பற்றிய விவரங்களை ராஜன் நூலில் காணலாம்.

### நச்சுப்பாம்பை நசுக்குவோம்!

இன்று திருகோணமலையில் 4 ஆம் இடத்திலுள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜயசேகர அரசின் ஆதரவோடு நடைபெற்ற சிங்கள குடியேற்றத்தின் விளைவு. அரசு நடத்துகின்ற பல முக்கிய கூட்டங்களுக்கு சம்பந்தரும், துரைரட்ணசிங்கமும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இவர் தான் அக் கூட்டங்களுக்கு கலந்துகொள்கிறார். இவர் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர். இவர் அண்மையில் புத்தர் சிலை நிறுவுவது உட்பட கந்தளாயில் அக்ரபோதியின் சிலை நிறுவுவதுவரை அனைத்து வெறியாட்டங்களுக்கும் துணை நிற்பவர்.

இந்த ஆபத்துக்கள் அனைத்தையும் நினைவிற்கொண்ட நிலையில்தான் இன்று சனிக்கிழமை திருமலை எழுச்சி மாநாடு நடைபெறுகிறது. இம் மாநாட்டில் வெள்ளம் போல் வீரம்கொள் தமிழர் கூட்டம். "தாயின் மணிக்கொடி பாரீர் அதைத் தாழ்ந்து பணிந்திட வாரீர்" என்று புலிக்கொடியின் கீழ் அணி திரண்டு நிற்க வேண்டியது தலையாய கடமையாகும். மக்களெல்லாம் பிரபாகரன் பக்கம் என்று ஆயிரம் மேடைகளில் நாம் முழங்கியுள்ளோம். இந்த உரை வெற்று உரையோ புகழ் உரையோ அல்ல; மாறாக உண்மை உரை என்று உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற முறையில் இந்த நாட்டுக்கு இலட்சக் கணக்கில் தமிழ்மக்கள் திரள வேண்டும். 1956இல் தமிழரசுக்கட்சி நடத்திய திருமலை யாத்திரை - தமிழரசுக் கட்சியின் மாநாட்டினை நினைவுபடுத்துகின்ற முறையில் வரலாற்று திருப்பு முனையாக இம் மாநாடு அமைய வேண்டும்.

### ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உண்மையை உணர்த்துவோம்

இம் மாநாடு எவ்விதம் அமைகிறது என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்ல உலகமே உற்றுக் கவனிக்கிறது. தேவையற்ற நிலையில் எரிச்சலூட்டும் முறையில் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சீறிப்பாய்ந்ததற்குப் பதிலடி கொடுக்கின்ற முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்துகின்ற முறையில் எம் சிந்தனையும் செயற்பாடுகளும் அமைய வேண்டும். மக்கள் சக்தி மாபெரும் சக்தி. இம் மக்கள் சக்தியை உலகம் எதிர்க்க முடியாது. காலப்போக்கில் அடிபணிந்தே ஆக வேண்டும்.

உலகப்புகழ் படைத்த வரலாற்று ஆசிரியர் **(Towne)** ரவுண்வியின் கூற்றுப்படி 21 நாகரிகம் படைத்த நாடுகளில் 19 நாடுகளின் வீழ்ச்சிக்குக் காரணம் வெளிநாட்டுப் படையெடுப்போ, ஆக்கிரமிப்போ அல்ல. மாறாக தம்மிடமிருந்த நம்பிக்கையீனமே காரணமாகும். எனவேதான் "ஏ ஈழத்தமிழினமே உன் மீது நீ நம்பிக்கை வைத்து புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று ஓங்கி குரலெழுப்புவாயாக" "நம்பிக்கை மலைகளையே அசைக்கும்" **(Faith can move mountians)** என்று விவிலியம் விளம்புகின்றது. ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கையில்லாவிடினும் உன் மீது நீ நம்பிக்கை வைத்து செயற்படு என்று வீரத்துறவி விவேகானந்தர் இடித்துரைக்கிறார். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்" என்று மொழிந்த வள்ளுவப் பெருந்தகை, தான் பிறந்த குடி உயர் ஒருவன் முயற்சி எடுப்பானாயின் தெய்வம் மடிதட்டி முந்துறும் என்று கூறுகிறார். அவர் கூற்றை மெய்ப்பிக்கும் முறையில் எம் தமிழக்குடி உயர நாம் முயற்சியெடுப்போம்.

# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**

இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)

021-222 8250, 0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்

## Mobile Phone Repairing Course

**Course Condense:-**

- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்.
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

**Hard Ware பயிற்சி**

- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Chareg ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

**Software பயிற்சிகள்**

- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன், பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

வகுப்புக்கள் ஆரம்பம்:-

*Batch I :- 28/10/2005 - 08.30-12.30*

*Batch II:-29/10/2005 - 01.30-05.30*

ஒரு பிரிவில் 20பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்

காலம் :- 2 மாதம்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


## தேசியமட்ட சேக்கிழார் மாநாட்டு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 22

இந்துகலாசார அலுவல்கள் அமைச்சால் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தேசிய மட்ட சேக்கிழார் மாநாட்டு போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் யாழ். மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

***பேச்சுப்போட்டி***

*கீழ்ப்பிரிவு* - முதலாம் இடம்: சின்னத்துரை சோபிதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

*மேற்பிரிவு - இரண்டாம் இடம்:* ரேக்கா தெய்வேந்திரம்(மல்லாகம் மகா வித்தியாலயம்).

***பண்ணிசை***

*கீழ்ப்பிரிவு* - முதலாம்இடம் சே.கோபிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

*மத்தியபிரிவு* - முதலாம் இடம் அழகேசன் அமிர்தசிந்துஜன் (இணுவில் மத்திய கல்லூரி).

*மேற்பிரிவு* - முதலாம்இடம்: வாசுகி கிருஷ்ணன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம்: ஜெ. வைஸ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

***நாடகம்***

*இரண்டாம் இடம்* மீசாலை இந்து இளைஞர் மன்ற ஆரம்ப அறநெறிப் பாடசாலை.

பங்குபற்றியோர்:V.கீர்த்தனன், சி.நிரோஜன், V.விசாகன், சி.சத்தியபாமா, இ.பகீரதி, A.வித்தகி. (202)

## பயிற்சி வகுப்பு

வடமராட்சி, ஒக். 22

வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களின் வசதிகருதி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கால்நடை வளர்ப்புத் தொடர்பான பயிற்சிவகுப்பு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.வசீகரன் இப்பயிற்சி வகுப்பினை நடத்துவார். ஆர்வமுள்ளோர் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202-173)


## SAAMSTECH இன் இலவச ஆங்கில தொலைக்கல்விப் பாடநெறி

### மூன்றாவது இலவச நேரடி வகுப்பு - 22.10.2005

இடம் : ரிம்மர் மண்டபம் (யாழ் மத்திய கல்லூரி அருகில்)

காலம் : இன்று (22.10.2005) சனிக்கிழமை

நேரம் : 9.00 -11.00, 11.00-1.00, 2.00-4.00, 4.00-6.00

ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்

### அனுமதி இலவசம்

இலவசப் பாடநெறிக்கு இதுவரை பதிவுசெய்து முதல் 24 அலகுகளைப் பெற்றவர்கள் அடுத்த 12 அலகுகளை இலவசமாகப் பெறலாம். வகுப்பில் கலந்து புதிதாக பதிவுசெய்வோர் முதல் புத்தகம் மற்றும் 36 அலகுகளைப் பெறலாம்

ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், தாதிகள், வங்கியாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைகழக ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி மற்றும் கனினி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், பெற்றோர் உட்பட 10 வயதிலிருந்து 50 வயதுவரையான யாரும் இந்த இலவச ஆங்கிலப்பாடநெறியில் சேரலாம்.

**அத்துடன் ஏராளமான சலுகைகள்**



*324, Palaly Road, Jaffna.*

**BIT**

விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

**1st & 3rd Semester**

*New Batches Commence*

**Sun Certified Java Programmer**

**100% Free for 3rd Semester Stu.**

**80%Free for 1st Semester Stu.**

**MCS** 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**Supported by UNDP/JRRP**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி **த. ழனிஷா** 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியமையையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென ஆசீர்வதிக்கிறோம்.

தகவல்:
யோ. இளந்திரையன்
பெருவளவு,
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

வாழ்த்துவோர்:
**அம்மா, அப்பம்மா, சித்தப்பாமார், ஆசையப்பா, சித்தி.**

(C/45845)(51-)

# United Nations Development Programme

The UNDP Mine Action Project, a Project of UN Support to Mine Action in Sri Lanka, has the following vacancies:

Post of Operations/Information Management Assistant to be based in Jaffna.

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

**Position of Operations / Information Management Assistant (OPS/IMA), JAFFNA.**

| The duties and responsibilities of the OPS/IM Assistant, Jaffna are as follows: | Educational Background: |
|---|---|
| The OPS/IM Assistant will be responsible to the Jaffna Operations Officer. Specific duties will be:<br>•Assist in maintaining the central filing system for IMSMA especially Task Dossier related documentation;<br>•Alter status for all objects in IMSMA;<br>•Assist in the maintenance of the IMSMA data related mine and UXO incidents and accidents including cross-checking with Government departments, UNICEF, ICRC and other related sources;<br>•Informing the Operations Officer on inaccuracies of incoming reports;<br>•Liaise with Mine Action, NGOs on IMSMA reports;<br>•Assist in updating the clearance progress reports by every week;<br>•Assisting in the maintenance of archived information in IMSMA Archives;<br>•Completing additional tasks assigned by the Mine Action Officer;<br>•Other duties as required by either the Mine Action Officer, Operations Officer or the Technical Advisor. | •University degree in a computer related subject or G.C.E.(Adv. Level) with 5 years' experience in the relevant field.<br>**Experience:**<br>•Experience with database use and/or information Management Systems;<br>•Excellent computer skills in the Windows 2000 and XP Professional environment with the ability to transfer written text into electronic text;<br>•Experience in operational issues for Mine Action preferred;<br>•Very good ability in topographical map reading;<br>•Accuracy of work and meeting deadlines; **Others:**<br>•Fluent in both written and spoken Tamil and English. Knowledge in Sinhala language is an advantage.<br>•Willing to travel for training if required;<br>•Possess good work habits with a willingness to work in a multi-cultural environment;<br>•Flexible and adaptable to any situation;<br>•Be in good health.<br>**Duration:** Initially for one year with probable extensions.<br>**Duty Station:** Jaffna. |

Qualified candidates are invited to send an updated CV containing details of educational and professional qualifications and work experience with the names of two, non-related referees and a contact telephone number during working hours, on or before 4pm on the 26th October 2005. The position offers an attractive remuneration package. Applications should be addressed to the Technical Advisor, UNDP Mine Action Project, District Secretariat, Jaffna.

**N.B. Only short-listed candidates will be notified.**

# தொடர்ந்தும் மிகவும் பின்தங்கிய நிலையில் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை

## சீர்படுத்த நடவடிக்கை தேவை என்கின்றனர் மக்கள்

சாவகச்சேரி,ஒக்.22

கொடிகாமத்தில் அரசினர் வைத்தியசாலை - மிகவும் பின் தங்கிய நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருவதாக அப்பிரதேசப் பொது மக்களால் கவலை தெரிவிக்கப் படுகிறது.

சுமார் 22 கிராம சேவையாளர் பிரிவுகளை மையப்படுத்தி அமைக் கப்பட்ட இந்த வைத்தியசாலை சுமார் 15 ஆயிரம் மக்களுக்குச் சேவையாற்றிவருகிறது.

இந்த வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வாகன வசதி இது வரை இல்லை. அவசர நோயா ளிகள், கர்ப்பிணிகள் போன்றவர் களை யாழ். போதனா வைத்தி யசாலைக்கோ அல்லது சாவ கச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கோ எடுத்துச் செல்ல தனியார் வாக னங்களையே நாட வேண்டி யுள்ளது. தாமதம் ஏற்பட்டால் அந்த அவசர நோயாளர்கள் மரணிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலையில் அம்புலன்ஸ் வசதி இம் மருத்துவமனைக்கு இன்றிய மையாத ஒன்றாகும்.

இந்த வைத்தியசாலையில் ஒரு மலசலகூடம் மட்டுமே உள்ளதா கவும் - ஊழியர்கள் உள்ளக நோயா ளர்கள், வெளிநோயாளர்கள் எனப் பலரும் இந்த ஒரு மலசலகூடத் தையே பயன்படுத்துவதால் பல் வேறு சிரமங்களை அவர்கள் எதிர் நோக்குகின்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வைத்தி யசாலை அபிவிருத்திச் சபையின ரால் பிராந்தியச் சுகாதார வைத்தி யப் பணிப்பாளருக்கு முறையிடப் பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநோயா ளர் பிரிவுக்கு தேவையான கட்டட வசதியும் இல்லை. இதனால், கர்ப் பிணிகளுக்கு சிகிச்சையளிக்கப் படும் அறையிலேயே வெளிநோயா ளர்களுக்கும் சிகிச்சை அளிக்கப் பட்டுவருகிறது.

இதனால், கர்ப்பிணிப் பெண் கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் தெரிவிக்கப்பட் டது.

இங்கு நாளாந்தம் சுமார் 125 நோயாளர்கள் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஒ-31)




## பனங்கிழங்கு உற்பத்தி மும்முரம்

வரணி,ஒக்.22

பனங்கிழங்கு உற்பத்தியில் தற்சமயம் பலரும் ஈடுபட்டுள்ள னர். அண்மைக் காலமாக பெய்து வரும் மழையையடுத்து பனம் விதைப் பாத்திகள் தயாரிக்கப்படு கின்றன. கடந்த வருடம் அதிக மழை பெய்ததால் பனம் பழங்கள் தற் போது அதிகம் கிடைப்பதாகவும்- கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை கூடுதலான பனங் கிழங்கு பெறப்படும் சாத்தியம் உள்ளதாகவும் எதிர்பார்க்கப்படு கின்றது. இதனால் புளுக்கொடி யல், ஒடியல் என்பன வழமையி லும் பார்க்க இவ்வருடம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் என விவ சாயிகள் நம்புகின்றனர். (ஒ-170)

## விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.22

வடக்கு- கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சேவை நிறுவனத் தால் யாழ்.மாவட்ட விவசாயிக ளுக்கு விதை உருளைக்கிழங்கு கள் வழங்கப்படவுள்ளது.

இதற்கான முற்பணத்தை எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் குப்பிளான் விவசாய சம்மேள னம், உரும்பிராய் கமநல சேவை நிலையம், கமநல சேவை நிலை யம் ஆகியவற்றில் ஏதாவது ஒன் றின் ஊடாகச் செலுத்தமுடியும் என வடக்கு- கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவைகள் நிறுவனத் தின் பணிப்பாளர் அறிவித்துள் ளார்.

(ஒ-ரி-352)

## யாழ். நகரப்பகுதி வங்கியில் கள்ளநோட்டு கண்டுபிடிப்பு

வலி.மேற்கு,ஒக்.22

யாழ். நகர வங்கி ஒன்றில் வாடிக் கையாளர் ஒருவர் வைப்பிலிட்ட ஆயிரம் ரூபா நோட்டுகளில் கள்ள நோட்டு ஒன்று இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை குறிப்பிட்ட வங் கிக் கிளையில் வாடிக்கையாளர் ஒருவர் தனது கணக்கில் பணத்தை வைப்பிலிடச் சென்றார். அவர் கொடுத்த ஆயிரம் ரூபா நோட்டு களில் ஒன்று கள்ள நோட்டாக இருக்கலாம் என்ற சந்தேகம் கரும பீடத்தில் இருந்த உத்தியோகத் தருக்கு எழுந்தது. இதனைத் தொடர்ந்து வங்கி அதிகாரிகள் பரிசோதனை செய்து அது கள்ள நோட்டு என உறு திப்படுத்தினர்.

இதனையடுத்து வங்கி அதிகாரி கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையா ளர் முன்னிலையில் கள்ள நோட்டை அழித்தனர்.

யாழ். குடாநாட்டில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டு புழக்கத்தில் உள்ளதாகவும் - பொதுமக்கள் விழிப் பாக இருக்குமாறும் - வங்கி அதி காரி வேண்டுகோள் விடுத்துள் ளார். (ஒ-175)

## வலி. தென்மேற்கில் நடமாடும் வங்கிச் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.22

தேசிய சேமிப்பு மாதத்தினை யொட்டி தேசிய சேமிப்பு வங்கி யின் மானிப்பாய்க் கிளையின் நட மாடும் வங்கிச் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை வலி.தென் மேற்குப் பகுதிகளில் நடைபெற வுள்ளது என்று வங்கியின் முகாமை யாளர் ப.சச்சிதானந்தம் தெரிவித் தார்.

சண்டிலிப்பாய் பாரதி சனசமூக நிலையத்திலும், மாதகல் சென். தோமஸ் தேவாலய வளாகத்திலும் இந்நடமாடும் வங்கிச் சேவை காலை 6.30 மணியிலிருந்து நண் பகல் 12 மணிவரை நடைபெற வுள்ளது என்றும் இதில் பொதுமக் கள் வங்கிக் கணக்கினை ஆரம்பித் துப் பயன்பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். (3-13)

## வடமராட்சியில் புற்றுநோய் சோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.22

பருத்தித்துறை சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் இன்றும் நாளையும் வாய்ப்புற்று நோய்ப் பரிசோதனை நடைபெறும் இடங் களின் விவரம் வருமாறு:-

இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை மத்திய மருந்தகம், ஆத்தியடி சிகிச்சை நிலையம், வியாபாரி மூலை ஆரம்ப சுகாதார நிலையம், வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலை, தொண்டைமானாறு ஆரம்ப சுகா தார நிலையம் ஆகிய இடங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அம்பன் மத்திய மருந்தகம், மணற் காடு இடம்பெயர்ந்தோர் முகாம், கற்கோவளம் சிகிச்சை நிலையம், கரவெட்டி மத்திய மருந்தக மகப் பேற்றுமனை, திக்கம் சிகிச்சை நிலையம், இமையாணன் சிகிச்சை நிலையம், சோளங்கன் சிகிச்சை நிலையம் ஆகிய இடங்களில் பரி சோதனை மேற்கொள்ளப்படும். (ஒ-202)

## தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்

விளையாட்டுத்துறை இளை ஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ் ஞான நிறுவனத்தில் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் விளையாட் டுத் துறையில் சிரேஷ்ட நிறைவேற் றுத் தரத்தில் குறைந்தது மூன்று வருடகால அனுபவமுடையவ ராகவும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் வழங்கப்பட்ட விளையாட்டுத்துறை பற்றிய அல் லது உடற்கல்வி பற்றிய விளை யாட்டுத்துறைப்பட்டப்படிப்பு சான்றிதழை பெற்றவராகவும் இருத் தல் வேண்டும்.

அத்துடன், விளையாட்டுத்துறை அலுவலர்களின் ஒன்றிணைந்த சேவை தரம் II இல் ஐந்து வருட சேவைக்காலத்தைப் பெற்றிருப்ப துடன் 55 வயதிற்குட்பட்டவரா கவும் இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ' செயலாளர், விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சு, இல.420, பௌத்தாலோக மாவத்த, கொழும்பு -07 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள் ளனர்.

* * *

டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையம் அகில இலங்கை ரீதியிலான சித் திரம் மற்றும் கட்டுரை ஆகிய போட் டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும் பும் தரம் 6-8 வரையான மாண வர்கள் 'நாங்கள் ஏன் பிறரின் உரி மைகளை மதித்து நடக்க வேண் டும்?' என்ற தலைப்பில் 350 சொற் களுக்கு குறையாமலும் - தரம் 9 -10 வரையான மாணவர்கள் 'மனித உரிமைகள் பாதுகாக்கப் பட்ட சமூகம் ஒன்றை உருவாக்கு வதற்கு நாம் எதனைச் செய்ய வேண்டும்?' என்ற தலைப்பில் 500-750 சொற்களுக்கு குறையாம லும்-

தரம் 12-13 வரையான மாணவர் கள் 'மனித உரிமைகளும் கீழைத் தேய மதக் கோட்பாடுகளும்' என்ற தலைப்பில் 750 தொடக்கம் ஆயி ரம் சொற்களுக்கு குறையாமலும் கட்டுரைகளை எழுதுதல் வேண் டும்.

சித்திரப்போட்டியில் தரம் 6-8 மாண வர்கள் 'மாணவர்களாகிய எங்களது கடமைகள்' என்ற தலைப்பிலும் - தரம் 9-11 மாணவர்கள் 'துஷ்பிர யோகங்களற்ற சிறுவர் சமூகம்' என்ற தலைப்பிலும் - தரம் 12-13 மாணவர்கள் ' சிறந்த சூழலில் வாழ் வதற்கான உரிமை' என்ற தலைப் பிலும் 18 X 22 அளவு அட்டையில் படங்களை வரைதல் வேண்டும்.

போட்டியாளர்கள் ஆக்கங் களில் பெயர், பாடசாலை, தரம் என் பவற்றை எழுதி பாடசாலை அதி பரால் அத்தாட்சிப்படுத்தி நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ' மனித உரிமைகள் கற்கைநிலையம், சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், றீட் அவனியூ, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண் டும்.

* * *

கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களில் 2006 ஆம் கல்வி ஆண்டில் உயர் தேசிய டிப் ளோமா பாடநெறிகளை பயில் வதற்கான விண்ணப்பங்களை உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப் பாளர் நாயகம் கோரியுள்ளார்.

இதற்கமைவாக யாழ்ப்பாணம் உயர் தேசிய தொழில்நுட்ப நிறு வனத்திற்கும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என மேற்படி நிறுவன பணிப்பாளர் த. இராஜரட் ணம் தெரிவித்துள்ளார்.

முழுநேரமும் பகுதி நேரமும் நடத்தப்படுகின்ற எட்டு உயர் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறி களுக்காகவும் நாடுபூராகவும் உள்ள 17 உயர் தொழில்நுட்ப நிறுவனங் களுக்குமாக விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரி வுகளில் பயின்று சித்தியடைந்த வர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகவல் தொழில்நுட்பம், கணக்கி யல் முகாமைத்துவம் உள்ளிட்ட எட்டுப் பாடநெறிகளில் இப்பாடநெறி யைப் பூர்த்திசெய்து சித்தியடைபவர் களுக்கு உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் காணப்படும் மாதிரி விண்ணப்பத்துக்கமைய மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப் பிப்பவர்கள் தமது விண்ணப்பங் களை நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கு மாறு யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் சு.இரா ஜரட்ணம் அறிவித்துள்ளார்.

(ஒ-203-152)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் பாடசாலை ரீதியான முடிவு கள் உதயனில் தொடர்ந்து வெளி யாகி வருகின்றன.

மேலும் சில பாடசாலை முடிவு கள் வருமாறு:-

**மீசாலை வீரசிங்கம் ம.வி.**

ர.தேனுசன் (169), ம.சர்வேசன் (140), மோ.தனுஷ்ராஜ் (134), சி.இந்திகா (134), சி.பிறிசிலா (133), குடிலக்சிகா (132), ச.றஜீதன் (128), நா.தனுஷிகா (128), தே. ஆதிரை (127), ச.சித்திராங்கி (125).

**இடைக்காடு ம.வி.**

தர்ஷிகா கனகராசா (133), ம.கிருஷாந் (130).

**அச்சுவேலி சரஸ்வதி வித்தி.**

சுமதி கணேஸ்வரன் (128).

**அச்சுவேலி கதிரிப்பாய் வித்தி.**

நிரோஜி சிவகுமார் (138)

**மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்**

சகிலா சிவசுப்பிரமணியம் (159), ந.சாயீசன் (141), கீர்த்தனா இர வீந்திரன் (140), பவித்திரா கோகு லானந்தன் (140), ப.தனுஷன் (139), சிறீகௌரி சுப்பிரமணியக் குருக்கள் (130), தன்சிகா மதிய ழகன் (127), யாழினி அன்பழகன் (125).

**யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**

கனிமொழி சுதானந்தராசா (166), திவ்ஜா ஜெனானந்தராசா (156), சோபனா பாலகுமார் (154), பிரணவி ஸ்ரீதரன் (153), ஜனனி சிவாகரன் (151), சரண்யா சோமேஸ் வரன் (149), பிரதீபா சந்திரசேகர் (147), வைஷ்ணவி தங்கராஜா (146), சாரங்கா சபாநாயகம் (145), ஜனனி சடாட்சரஜோதி (145), சுபத்திரா சிவசுப்பிரமணியம் (143), சாம்பவி சிறீதர் (142), துளசிகா ரவீந்திரன் (142), கஜனாராயணி செல்வரட்ணம் (141), லோஜிதா யோகேந்திரன் (139), சிந்துஷா ரவீந்திரன் (138), கீர்த்தனா காசி லிங்கம் (137), சத்தியா சிவானந்த ராசா (137), சுதர்சிகா சுந்தரலிங் கம் (137), யாழினி ராஜேந்திரன் (137), இமாஜினி செல்வராஜா (136), விதுஷா ஜெயக்குமார் (136), ஸ்ரீவித்தியா கணேசன் (135), நித்தியாறணி ஸ்ரீதரன் (135), தனுஷா அமிர்தலிங்கம் (135), ஜனனிகா ரதீஸ்வரன் (134), தாட் சாயினி பாலகிருஷ்ணன் (134), டலுக்ஷனா அன்பழகன் (132), தமிழினி நடராஜா (132), சோபி காசினி ஸ்ரீபதி (131), அர்ச்சனா சிவ ராஜா (130), சைலா மகேந்திரன் (130), டுவாரகா ஞானசேகரம் (130), பகீரதி பரமானந்தம் (129), நிரஞ் சனா கந்தசாமி (129), பவித்திரா குணரட்ணம் (127), துஷ்யந்தி கந்தசாமி (127), ஸ்ரீதரா வரதராஜா (126), கௌசல்யா தியாகராஜா(126), கனிஸ்ரா அரசரட்ணம் (125), சூரி யப்பிரியா பாஸ்கரன் (125), மது ஜினி பாலச்சந்திரன் (125), லக்சியா ரகுநாதன் (124), மதுரா வீரசிங்கம் (124), நிஷாந்தினி ஆனந்தசிங் கம் (124), சர்மிலி ராஜேந்திரன் (124), சுஜீபா முத்துலிங்கம் (124), ஆரணி தங்கராஜா (124).

(12)

ஒக்டோபர் - வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

பாடசாலை நூலகம் கல்வித் திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டுமா... வாசியுங்கள்!

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் டிப்போவுக்கு அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சீ.மகாலிங்கம் (ராசன்), தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (41720)

யாழ்.நகரில், மானிப்பாய் வீதியில், K.K.S. வீதிச்சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் 4200 சதுரஅடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P.: 0112597183. 0115364293. (சி-45692)

### தவறிவிட்டது

ந.யோகரத்தினம் என்பவரது லைசென்ஸ் உள்ளடங்கிய முக்கிய ஆவணங்கள் வல்லிபுர ஆழ்வார் தீர்த்த உற்சவத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ந.யோகரத்தினம் இலங்கை வங்கி, பருத்தித்துறையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 077 6138621. (41744)

பாலச்சந்திரன் ஜெயரூபன் என்பவருடைய தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் (A-365708) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பா.ஜெயரூபன், 'கோகுலம்', உயரப்புலம், ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 077 6906726. (41741)

### வாடகைக்கு

K.K.S. றோட்டுக்கு அண்மையில் நல்ல சூழலில் சுமார் 10 பேருக்கு மேற்பட்டோருக்கு ரியூசன் நடத்துவதற்குத் தகுந்த இடம் வாடகைக்குண்டு. தொடர்பு: 3/3, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (41749)

### மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதானவீதி (பஸ்தியான் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 322 2999, 0776 991899. (40087)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்லநிறமுடைய, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு, 39 வயதுக்குட்பட்ட, அரசாங்கம்/வங்கி/கூட்டுஸ்தாபனம்/பட்டதாரி ஆசிரியர் தேவை. சீதனம் உண்டு. தொடர்புகளுக்கு சண்முகராஜா, மதிப்பீட்டாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (41742)

### மணமகள் தேவை

இங்கிலாந்தில் நிரந்தர வதியுடமையுள்ள, கணனி ஆலோசகராகத் தொழில்புரியும், 28 வயதுடைய, திருவோண நட்சத்திரமுடைய மணமகனுக்கு பல்வைத்தியர் அல்லது வைத்தியத் தொழில் புரியும் மணமகள் தேவை. தொடர்பு: K.P.S.நாதன் (இளைப்பாறிய அரச நில அளவையாளர்) இராசவீதி, தோப்பு, அச்சுவேலி. T.P.: 0779613050. (41719)

### நற்கருணைப் பேரணி

சில்லாலை பங்கு மக்கள் நடத்தும் நற்கருணைப் பேரணி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இப்பேரணி சில்லாலை புனித கதிரைமாதா ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி சில்லாலை பிரதான வீதி, பண்டத்தரிப்புச் சந்தி, அம்மன் வீதி, சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத்தைச் சென்றடையும். இத்தகவல்களை சில்லாலைபங்குத் தந்தை அருட்திரு ஏ.ஜூட் நிக்சன் அடிகளார் தெரிவித்தார். (ஒ-135)

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



Dr.பொ.இராமநாதன்
(DAMS, M.D., PhD.)
அகில இலங்கை சித்தாயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்க முன்னாள் தலைவர்



Dr.க.ஸ்ரீதரன்
(BSMS, MPhil, J.P.)



Dr.சு.குமரன் திருமதி கவியரசி குமரன்
MBBS (Sri Lanka) BSc.(Agriculture)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்புவிழாவில் PhD.பட்டம்பெற்ற Dr.பொ.இராமநாதன், MPhil பட்டம் பெற்ற Dr.க.ஸ்ரீதரன், MBBS பட்டம்பெற்ற சு.குமரன், BSc.(Agriculture) பட்டம் பெற்ற திருமதி கவியரசி குமரன் மற்றும் BSMS பட்டம் பெற்ற பட்டமாணிகள் அனைவருக்கும் எமது பாராட்டுகளை வழங்கி மனதார வாழ்த்துகிறோம்.

வட்டு.வடக்கு, சித்தன்கேணி. (41743)(50) கிளை: அல்வாய் மேற்கு, அல்வாய். எவரெஸ்ட் மருந்தகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/வற்றாப்பளை ம.வி அதிபர் உயர்திரு. நடராசா இரங்கநாதன் அவர்கள் 07-10-2005 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed.) பட்டம் பெற்றுக் கொண்டமையை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பட்டங்கள் பெற வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**மு/வற்றாப்பளை ம.வி.**

(சி/45848)(46-15-45-42)

## CONGRATULATIONS



2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணத்தில் வங்கிச் சேவையில் அதிசிறந்த கிளையாக, இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு பெருமைகொள்வதுடன், பருத்தித்துறைக் கிளையின் அன்றைய முகாமையாளராகவும் தற்போது யாழ். மாவட்ட முகாமையாளராகவும் கடமையாற்றும்

**திரு.A.T.A.தேவராஜா**

அவர்களையும் சக உத்தியோகத்தர்களையும் மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். (C/45859) (24.15.45.42)

வாழ்த்துவோர்:
ராஜன் சைக்கிள்வேக்ஸ், சிவராஜ் ரேடிங்கோ., கனன் போட்டோகொப்பி, குமரேஷ் ரேடர்ஸ், பாலன் காட் வேயர், ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் - பருத்தித்துறை.

## தேவை
## Despatch Clerk

*கொழும்பிலுள்ள நிறுவனமொன்றின் விநியோகப்பகுதியில் கடமையாற்ற விநியோக லிகிதர்கள் தேவை. 20-35 வயதிற்கிடைப்பட்ட G.C.E. O/L சித்தியடைந்த மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உடைய சுறுசுறுப்பான இளைஞர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 28.10.2005 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.*

*விள.இல. 2725,*
C/O **உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(C/45865)(42.15.45)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
'SPOKEN ENGLISH' By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை.
(41750)(42-15-45) 'ROYAL IS THE BEST'

## BRIDEGROOM WANTED

For my niece, Hindu, Age 33, English Trained Teacher, Fair, Presentable looks. A state Service, Local Government, Bank, Corporation, Graduate teacher, within 39 years age. Dowry available.

**Sanmugarajah, Valuer,**
387, Temple Road, Nallur, Jaffna.

### தொலைக்கல்வி பாடநெறி

யாழ்ப்பாணம், ஒக்.22

'சாம்ஸ்ரெக்' நிறுவனத்தின் இலவச ஆங்கில தொலைக்கல்விப் பாடநெறியின் மூன்றாவது வகுப்பு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-202)

# STUDY ABROAD

## வெளிநாட்டு கல்வி ஆலோசனை



- Switzerland
- United kingdom (UK)
- India
- Ukraine (Medical Degree)
- Canada
- Australia
- Malaysia
- New zealand

மேற்குறிப்பிட்ட நாடுகளில் Diploma அல்லது Degree பாடநெறிகளில்சேர்ந்து உங்கள் உயர்கல்வியை தொடரமுடியும். இவை தொடர்பாட விபரங்களைப்பெற அறியவாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில்.......

22ஆம் திகதி(சனிக்கிழமை) & 23ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.
நேரம் : 22ம் திகதி சனிக்கிழமை-மாலை 3.30 pm - 6.30 pm
23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை-காலை 9.30 am - 1.30 pm

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com **Tel: 0777-767818**

**Passport / Visa assistance provided**

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

நோர்வே, ஒஸ்லோவில் வசிக்கும் கிருபாகரன் - சுரேகா தம்பதியரின் செல்வப்புதல்வர்களான லம்போதரர், ஜெயதீபா ஆகியோர் பிறந்த தினத்தை தமது இல்லத்தில் கொண்டாடுகின்றனர் இவர்களை அப்பா, அம்மா, பாட்டா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நயினை நாகபூசணி அம்மன் அருள் பெற்று சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்
பு.தேவகரன்
(சித்தப்பா)

அரியாலை.



கி.ஜெயதீபா
முதலாவது பிறந்ததினம்
23.10.2005

கி.லம்போதரர்
4ஆவது பிறந்ததினம்
21.10.2005

(41715)(11-19-53)

# சந்தை வாய்ப்பு அதிகமாக உள்ள நெல் ரகங்களை பயிரிட அறிவுறுத்து

சந்தை வாய்ப்பு அதிகமுள்ள நெல்லினங்களைப் பயிரிடுவதன் மூலம் நெல் சந்தைப் படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தீர்வு காணமுடியும்.

- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

விளைந்த நெல்லை விவசாயிகள் சந்தைப் படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையால் காலபோகச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை என கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர். இதற்குப் பதிலளிக்கையிலேயே அரச அதிபர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் அனைவரும் ஒரே இன நெல் வகையையே பயிரிடுகின்றனர். இதனால்தான் விளையும் நெல்லைச் சந்தைப் படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தடுக்க சம்பா, வெள்ளைநாடு போன்ற பல்வேறுபட்ட நெல் ரகங்களை வெவ்வேறு விவசாயிகள் பயிரிடுவதன் மூலம் சந்தைப் படுத்தலில் உள்ள பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும். கூட்டுறவுச் சங்கங்களூடாக சம்பா ரக நெல்லை 16 ரூபா 50 சதமாகவும் வெள்ளைநாடு ரக நெல்லை 15 ரூபா 50 சதமாகவும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆகவே, எதிர்வரும் காலபோக நெற் செய்கையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மேற்படி நெல்லினங்களை உற்பத்தி செய்ய முன்வரவேண்டும்.

காலபோகத்திற்கும் சிறுபோகத்திற்குமான நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கென 70 மில்லியன் ரூபா கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. அவற்றினூடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது - என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஓ-204)

## சிரமதானம்

ஒட்டுசுட்டான், ஒக்.22

சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துஐயன் கட்டு, வலதுகரை இரண்டாம் கண்டத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டப வளாகம், கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் துப்புரவுப் பணி நடைபெற்றது. (ஓ-341)

# கடமையைப் பொறுப்பேற்க ஆசிரியர் தயக்கம்; தங்கும் வசதி இல்லாததே அதற்குக் காரணம்!

## ஆசிரியர் விடுதி மிக அவசியம் என்கிறார் பணிப்பாளர்

ஒட்டுசுட்டான், ஒக்.22

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் பெறும் ஆசிரியர்கள் கடமையைப் பொறுப்பேற்கத் தயங்குகின்றனர். வெளி இடங்களைச் சேர்ந்தவர்களான அவ்வாசிரியர்களுக்கு இங்கு தங்கும் வசதி இல்லாமையே இதற்குக் காரணம். ஆகவே, பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படவேண்டியது கட்டாயமாகும்.

துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் இவ்வாறு தெரிவித்தார். கற்சிலை மடுப்பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பணிப்பாளர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்தப் பாடசாலைகளில் ஆசிரியர் வளம் மிகக் குறைவாகவே உள்ளதாக பாடசாலை அதிபர் கூறுகின்றார்.

சமீபத்தில்கூட இப்பாடசாலைக்கு சில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் இதுவரை பொறுப்பேற்கவில்லை. பட்டதாரி ஆசிரியர்களையும் நியமித்தோம். கடந்த வாரம்கூட ஒருவர் நியமனம் பெற்றார். ஆனால், எவரும் பணியில் சேரவில்லை.

இப் பாடசாலையருகே ஆசிரியர்கள் தங்கும் விடுதி இல்லை. அதனால், வேறிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இங்கு தங்கிச் சேவையில் ஈடுபடமுடியாதுள்ளனர். இதனாலேயே நியமனம் பெறும் ஆசிரியர்கள் இங்குள்ள பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்கத் தயங்குகின்றனர்.

ஆகவே, எப்பாடுபட்டாவது பாடசாலைகளில் ஆசிரியர் விடுதியை அமைத்து ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அனைவரும் இணைந்து முயற்சிப்போம். இவ்வாறு பணிப்பாளர் தெரிவித்தார். (ஓ-341)

# கத்திவெட்டில் குடும்பஸ்தர் மரணம்!

பரந்தன் ஒக், 22.

அயலவரோடு ஏற்பட்ட தகராறில், ஒருவர் கத்தியால் வெட்டப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்டாவளை கல்லூறுக் கிராமத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட குடியிருப்பில் இடம் பெற்றது.

குடியிருக்கும் வீடுகளுக்கு ஊடான பாதை தொடர்பான தகராறே கத்திவெட்டில் முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் மகேந்திரம் (வயது 41) என்பவரே கழுத்து மற்றும் தோள் மூட்டில் ஏற்பட்ட வெட்டுக்காயம் காரணமாக உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்கு விசுவமடு காவல் பணிமனைப் பரிசோதகர் ஜெகதரன் தலைமையிலான குழுவினர் விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த நீதியாளர் திருமதி பாஸ்கரன் சடலத்தை நேரில் பார்வையிட்டார்.

இதேவேளை, கொலையாளி எனக் கருதப்படும் அதே இடத்தை சேர்ந்த ஒருவர் விசுவமடு காவல் துறையினரிடம் சரணடைந்தார். விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (த.352-204)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## கிராமிய வங்கியின் பரிசில் திட்டம்

சர்வதேச சேமிப்பு நாளை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கி பல்வேறு பரிசில் வழங்கும் திட்டங்களை அறிமுகஞ்செய்துள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கிராமிய நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி தற்போது வளர்ச்சிகண்டு பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுடன் கிராமிய அபிவிருத்தி வங்கி என்ற பெயரில் சேவையாற்றி வருகிறது.

இந்த வங்கி உற்பத்தியாளர்களுக்கான கடன் திட்டங்கள், விவசாயிகளுக்கான கடன் திட்டங்கள், சுயமுயற்சி கடன்திட்டங்கள், சூரிய மின்கலங்கள் வழங்கும் திட்டம், கடற்றொழிலாளர்களுக்கான கடன் வழங்கும் திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டங்கள் எனப் பல்வேறு கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த வங்கியின் மூலமே தற்போது சர்வதேச சேமிப்பு நாளை முன்னிட்டு பல்வேறு பரிசுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (த-352-203)

## நாவன்மை, கலைத்திறன் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே நாவன்மை, கலைத்திறன் போட்டிகளை நடத்தியது.

அந்தப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்களில் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. மிகுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

பிரிவு "உ"

ம.ஒலிசியா (பிரமந்தனாறு ம.வி.), தி.ரதினி (தருமபுரம் இல.1 அ.த.க.பா.), நி.டிசாயிராம் (புன்னின நீராவி அ.த.க.பா.), சி.டர்மிகா (பிரமந்மனாறு ம.வி.).

2. ஊரக ஆடல்: தருமபுரம் ம.வி.

3. நாடகம்: முருகானந்தா ம.வி.

**கரைச்சிக் கோட்டம்**

நாவன்மை

பிரிவு "அ"

த.கீதரோகினி (இராமநாதபுரம் ம.வி.), சி.துவாரகன் (இராமநாதபுரம் ம.வி.).

பிரிவு "ஆ"

ம.திருநாயினி (கிளிநொச்சி ம.வி.), க.ஆதித்தன் (இராமநாதபுரம் ம.வி.), சி.துளசிகன் (கிளி/மத்திய கல்லூரி).

பிரிவு "இ"

சி.கீர்த்திகா (இராமநாதபுரம் ம.வி.), ம.சானுசா (கிளி/இந்துக் கல்லூரி), இ.விசந்தன் (இராமநாதபுரம் ம.வி.), இ.டப்சலா (கிளிநொச்சி ம.வி.).

பிரிவு "ஈ"

ஜெ.ஜெயமாருதி (இராமநாதபுரம் ம.வி.), ய.கலிராம் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.), கு.கீர்த்தனன் (கிளிநொச்சி ம.வி.), சி.இன்பமதி (திருவையாறு ம.வி.).

பிரிவு "உ"

ப.நிதர்சனா (கிளிநொச்சி ம.வி.), ய.கர்சிகா (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.), வி.விபூசனா (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.), கு.கசுமினா (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.). (த-202)

## லிகிதர்கள் தேவை

யாழ்.நகரிலிருக்கும் பிரபல நிறுவனத்திற்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் வர்த்தகம் அல்லது கணக்கீட்டுடன் சித்தி எய்திய ஆண் லிகிதர்கள் தேவை.

சுயவிவரத்துடன் 26.10.2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. 2726,**
**மே/பா உதயன்.**

(சி/45876)(32-45-25)

## மரண அறிவித்தல்

### *திருமதி இராசலெட்சுமி தங்கராசா*

இல.375 (625), **k.k.s** றோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல 56, பிறவுண் றோட், நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலெட்சுமி தங்கராசா 20.10.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கராசா (**E.k.t** - பிரபல மில் உரிமையாளர், ஆனைப்பந்தி) அவர்களின் அன்பு மனைவியும் அன்னார் காலஞ்சென்ற இராசப்பா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் கனகசபாபதி (கனடா), அமரர் தியாகராசா, அன்னலெட்சுமி (கனடா), பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுதன், திருமதி சிவதர்சினி, சிவநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மோகன் (கனடா) அவர்களின் அன்பு மாமியும் இரத்தினசிங்கம், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சறோஜினிதேவி, நாகராசா (இளைப்பாறிய ஆசிரியர்), தியாகராசா (தொழிலதிபர் - கொழும்பு), யோகராசா, செல்வராசா (இந்தியா), தவமணிதேவி (அமெரிக்கா), அமரர் லீலாவதி, லலிதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆ.சுப்பிரமணியம், இராசம்மா (இளைப்பாறிய அதிபர்- உடுப்பிட்டி) தம்பதியினரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (23-10-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல்:*
*த.சிவசுதன் (மகன்).*

*இல 56, பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

(41769)(46-45-15-25)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## கலைப்பீடம்
## முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2005/2006
## விளம்பரத் திருத்தம்

**மேற்படி கற்கைநெறிக்கான விளம்பரத்தில் "விண்ணப்பங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும்…" என்பதை "மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும்…" எனத் திருத்தி வாசிக்கவும்.**

*பதிவாளர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*2005.10.21.* (சி-45883)11-17-25)

## தவறிவிட்டது

**கட்டுடைச் சந்திக்கும் - துர்க்கா மில்லுக்கும் இடையில் (21.10.2005) வெள்ளிக்கிழமை ஒரு தொகை பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.** (41780) (11-17-25)

தொடர்பு: K.சுந்தரகுமார்
சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
T.P: 077 8181973, 0777 042373

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 - 04 - 1942 |  | 29 - 10 - 1999. |

**அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்**

திதி: 22-10-2005

அன்பைச் சொரிவதிலே மழையாகினீர்
ஆதரவு தருவதிலே நிழலாகினீர்
உறவை வளர்ப்பதிலே உயிராகினீர்
உடலாலெமைப் பிரிந்து இறையாகினீர்.

சங்குவேலி தெற்கு,
*மானிப்பாய்.*

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மருமகன் (*பிரசானந்தன்*).

(41772)

## யாழ் நகர்மைய நல்லூர் றோட்டறக்ட் கழகங்களின் பதவி ஏற்பு வைபவங்கள்

யாழ் நகர்மைய றோட்டறக்ட் கழகம் மற்றும் நல்லூர் றோட்டறக்ட்கழகம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் 2005/2006ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபை பதவியேற்பு வைபவங்கள் இன்று நடைபெறுகின்றன.

யாழ் நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினுடைய 14 ஆவது தலைவர் Rtr.பிரதீபா சந்திரசேகரம் தலைமையிலான நிர்வாக சபையும் நல்லூர் றோட்டறக்ட்கழகத்தின் 5 ஆவது தலைவர் Rtr.கனகரெத்தினம் ஓங்காரறூபன் தலைமையிலான நிர்வாக சபையும் உத்தியோகபூர்வமாக இன்று பதவி ஏற்கின்றனர்.

காலம் - 22.10.2005(இன்று)
நேரம் - மு.ப 10.00 மணி(இ.நே)
இடம் - 16/2, சீனியர் லேன், கலட்டி.

பிரதம விருந்தினர்:
Rtn.N.Saravanapavan
(President Rotary Club of Jaffna)

சிறப்பு விருந்தினர்:
Rtr.PP.Jakque Diasz
(DRR-RI District - 3220)

இன் நிகழ்வில் றோட்டறி, றோட்டறக்ட் மற்றும் இன்ரறக்ட் கழகங்களின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர் றோட்டறக்ட்கழகம் யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்

# மரண அறிவித்தல்



## திருமதி சீதாலட்சுமி காசிப்பிள்ளை

யூாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலட்சுமி காசிப்பிள்ளை 19-10-2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கணேசநாதன் (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), நவமணிதேவி (உபதபாலதிபர், தாவடி), தனலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்மலர், கோவிந்தராணி, அருமைநாயகம் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சண்முகதாஸ் (கனடா) ஆகியோரின் மாமியாரும் திருமதி துஷியந்தி விபுலானந்தராஜா (கனடா), லலிதா, சிவதர்சன், சிவறஞ்சன், சிந்துஜா, சுமித்திரன், சுகிர்தன், சரணிஜா, சாகீசன், சாகீனி, சாகீரன் ஆகியோரின் பேர்த்தியும் மதுஷா, மதுரகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23-10-2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.அருமைநாயகம்
(மருமகன்).

தாவடி தெற்கு,
கொக்குவில்.
(41748)(26-11-19)

# போட்டிப் பரீட்சை கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம் ,ஒக்.22

இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி நிர்வாகம், அதிபர், ஆசிரியர் ஆகிய சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைகளுக்குத் தொடர் கருத்தரங்குகளை நடத்திவருகின்றது.

இக் கருத்தரங்குத் தொடரில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணி தொடக்கம் யாழ். இந்துக் கல்லூரியில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இன்றைய கருத்தரங்கில் 'பாடசாலை மைய முகாமைத்துவம்' என்னும் தலைப்பில் வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதனும் 'சமகாலக் கல்வி' என்னும் தலைப்பில் பேராசிரியர் சபாஜெயராசாவும் 'கிரகித்தல்' என்னும் தலைப்பில் பா.மகாலிங்கசிவமும் கருத்துரை நிகழ்த்துவர்.

நாளைய கருத்தரங்கில் 'பாடசாலை முறைமையும் அதற்கான சவால்களும்' என்னும் தலைப்பில் போராசிரியர் மா.சின்னத்தம்பியும் 'கலந்துரையாடலும் கல்வித்திணைக்களமும் அதிபர்- ஆசிரியர் தொடர்புகளும்' என்னும் தலைப்பில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் இ.தவராசாவும் கருத்துரைகளை நிகழ்த்துவர்.

(3-202)

# 30 ஆம் நாள் நினைவு



## திருமதி மாசிலாமணி மணிமேகலாதேவி

பாசமிகு அக்காவே! அன்புமிகு மச்சாளே!
ஆருயிர் மாமியே! எம் அருமை குட்டி அம்மம்மாவே!
எல்லோருக்கும் எல்லாமாய் இருந்தாயே
இல்லத்தில் இன்பமாய் வாழ்ந்து
நல்லறத்தில் ஆண்டு பலகளித்து
விதியவன் வினைப்பயனால்
விண்ணுலகத்துக்கு சென்று விட்ட உங்களது
*ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சி.பொன்னம்பலம்,
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
கொக்குவில்.
T.P.: 077 9068048

தம்பி குடும்பத்தினர்.

(41753)(46-26-11-19)

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH — solidar An INGO consortium including NPA, SAH and ASB

# கூறுவிலை கோரல்

### செம்பியன்பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்

ஏ.எஸ்.பி. என்.பி.ஏ. மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செம்பியன்பற்று வடக்கிலும் வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல்வைக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்துக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்ட விரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தகாரர்கள் கூறுவிலைப் பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ்க்காணும் முகவரியில் ரூபா 3000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறுவிலை விண்ணப்பப் படிவங்களும் ஆவணங்களும் 26.10.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

**Solidar / ASB Construction Office**
**160, Mile Post,**
**Farm Point,**
**A-9 Road,**
**Paranthan.**
**தொலைபேசி:021 228 5147**

(சி/45860) (24-26-11-19)

# IMMEDIATE VACANCY

solidar An INGO consortium including NPA, SAH and ASB

## Position: Field Monitors (4 Positions)

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Srilanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami affected families in Vadamarachchi East.

The Field Monitors will follow up the daily progress of construction on site, He/She will be responsible for assuring quality control of the construction works carried out by the subcontractors and prepare daily reports to the technical officer.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in your applications to reach us on or before 27 th October 2005.

**Qualifications:**

* A Civil engineering/architecture degree with a minimum of one year construction experience.
* Or a NDT or NCT with minimum 2 years construction supervion experince.
* Or a background in construction supervision with minimum 6 years experience.
* Knowledge in English language is essential.
* Should be computer literate (Microsoft Word and Excel)

**Solidar,**
**No.156, Jaffna Road,**
**Paranthan.**

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## கூறுவிலை கோரல்கள்
### (திகதி நீடிக்கப்பட்டுள்ளது)

வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகட்டுவான் வீதியில் 12.475 - 14.5 கி.மீ பகுதியில் சேதமடைந்த சரிவுகள் பாதையின் ஓரச்சுவர்க்கற்களை சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்பிற்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதிவழங்கல்கள் மூலம் புனர்நிர்மாணம் செய்தல்.

1. பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) மேற்குறிப்பிட்ட வேலைக்கான மூடிய கேள்விப்பத்திரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாகப் பெற்றுக்கொள்வார். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 16-11-2005 அன்று பிற்பகல் 2மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு-கிழக்கு (வடக்கு) யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா காரியாலயங்களில் கிடைக்கும் கேள்விப்பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 24-10-2005 தொடக்கம் 14-11-2005 வரை மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர கட்டணமான 1750.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
2. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.
3. தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.
   அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M-4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   ஆ) கேள்வி கோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாண மற்றும் கண்டி வீதி, வவுனியா காரியாலயங்களில் பார்வையிடலாம்.
5. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.
6. கேள்விப் பாதுகாப்புக் கட்டணத்தொகையான ரூபா 325,000/= பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
7. முன்கேள்வி கோரல் கூட்டம் 10.11.2005 அன்று முற்பகல் 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகார சபை, கண்டி வீதி, வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.
8. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவதுமாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல அலுவலகத்திற்குப் பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாவது மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
10. மேலதிக விவரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர்/ வடக்கு - கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா, தொலைபேசி இலக்கம் 024 222 2826, 024 222 0679, தொலைநகல் இலக்கம் 024 222 2826 மின்னஞ்சல் முகவரி rdanorth@sltnet.lk மாகாணப் பணிப்பாளர்/ வ.கி (வடக்கு) யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 2517, தொலைநகல் இலக்கம் 021 222 2517 மின்னஞ்சல் முகவரி rdapdnenj@slt.lk பிரதானபொறியியலாளர், யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 2968 மின்னஞ்சல் முகவரி rdacejf@sltnet.lk என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

R.W.R. பேமசிறி.
பொதுமுகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

(சி/455863)(26-19-11)

மோசஸ் மரியதாஸன்,
மாகாணப் பணிப்பாளர் / வ.கி (வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பணம் / வவுனியா.

# மாணவர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்த ஆசிரியர்



**யா**ழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராக 34 வருட பணிசெய்த ரி.ஆனந்தரத்தினம் 16-09-2005 வெள்ளிக்கிழமை மறைந்தார். இவருடைய மரணச் செய்தியைக் கேட்டு உலகெங்கிலும் பரந்துவாழும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள் கண் கலங்கி நின்றனர். இதற்குக் காரணம் அவர் மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியனாக மட்டுமன்றி, சிறந்த வழிகாட்டியாகவும் நம்பத்தகுந்த நண்பனாகவும் சுயநலமற்ற சமூக சேவையாளனாகவும் இருந்தமையே ஆகும்.

வட்டுக்கோட்டையில் ஒரு வைதீக இந்துக் குடும்பத்தில் பிறந்த ஆனந்தரத்தினம் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று, பேராதனையில் தனது பட்டப் பிடிப்பினைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியரானார். 1990ஆம் ஆண்டு அவர் இளைப்பாறும் வரை அக்கல்லூரியில் பொருளியல், இலங்கை வரலாறு, ஆங்கிலம் என்பவற்றைப் போதித்தார். அத்துடன், அக்கல்லூரியின் விளையாட்டுத்துறை, உயர்தர மாணவர் சங்கம்,மாணவர் சஞ்சிகை, மாணவர் ஆட்சிக் குழு என்பவற்றின் பொறுப்பாசிரியராகவும் விளங்கினார். இவ்வளவு பொறுப்புகளையும் வகித்த ஆனந்தரத்தினம் அதிகாலை 7.30 மணிக்கே பாடசாலைக்கு வந்துவிடுவார். பிற்பகல் விளையாட்டு மைதானத்திலிருந்து அவர் திரும்பும் பொழுது நேரம் இரவு 7 மணியாகிவிடும். இதனாலே மாணவர்களும் சகல ஆசிரியர்களும் இவரை கர்மயோகி என்று அழைத் தார்கள்.

## நீத்தார் நயப்புரை

ரி.ஆனந்தரத்தினம் அவர்களுடைய மாணவனாகவும் அவருடன் சக ஆசிரியனாகவும் அவருடைய கல்லூரி அதிபராகவும் நான் அவரைப் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிட்டியது. அவரிடம் இருந்த பணிவையும் கடமை உணர்வையும் நான் உலகத்தின் எந்தப் பாகத்திலும் பார்க்கவில்லை. எனக்கு ஆசிரியராக இருந்தவர். நான் அதிபராக வந்த பின்னர் என்னுடன் பேசும்பொழுது எழுந்து நின்றே பேசுவார். எந்த வேலையை ஒப்படைத்தாலும் முழுமனதுடன் செய்துமுடித்து ஒத்தாசை நல்குவார்.

ஆனந்தரத்தினம், வாழ்க்கைப் பாதையில் நாம் அபூர்வமாகச் சந்திக்கும் சுய நலமற்ற மனிதர்களுள் ஒருவர். கடன்கொடுத்தால் திருப்பிக் கேட்கமாட்டார். கடன்பெற்றவர்கள் தாமாகத் திருப்பித் தரவேண்டும் என்பது அவருடைய கொள்கை. அவர் தேநீர்ச்சாலை ஒன்றில் தேநீர் அருந்த உட்கார்ந்துவிட்டால், நண்பர்களும் அங்கு கூடிவிடுவர். ஆனால், எப்பொழுதும் எல்லாருடைய கணக்கையும் தீர்த்துவிட்டு தேநீர்ச்சாலையைவிட்டு வெளியேறுபவர் ஆனந்தரத்தினம் அவர்கள். இதனை நான் பலமுறை கண்டுள்ளேன்.

ஆனந்தரத்தினம் அவர்களது சேவை கல்லூரி வட்டாரத்திற்குள் அடங்கிவிட வில்லை. வட்டுக்கோட்டை மக்கள் அனைவருமே அவரை மனதார நேசித்தார்கள். இதற்குக் காரணம் அவர் சகல மக்களுக்கும் ஆபத்பாந்தவனாக இருந்தமையேயாகும். ஊர் மக்களுடைய 'பென்ஷன்' வேலை, கச்சேரி வேலை, நொத்தாரிசு வேலை, தபாற்கந்தோர் வேலை, பிரதேச சபை வேலை எல்லாவற்றையுமே மன மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு செய்துகொடுப்பர்.

ஆனந்தரத்தினம் எப்பொழுதும் தனது இன்பத்தையே பகிர்ந்தார். துன்பத்தைத் தனக்குள் அடக்கிக்கொண்டார். தம் வாழ்நாள் ஒவ்வொன்றையும் மற்றவர்களுக்குப் பயன்கொடுக்கின்ற ஒரு நாளாகவே கழித்தார்.

எத்தர்களும் ஏமாளிகளும் நிறைந்த உலகத்திலே ஆனந்தரத்தினம் அவர்கள் நற்பண்புகள் குடிகொண்ட மகானாக உலாவிவந்தார்.

மலேயாவில் பிறந்த ஆனந்தரத்தினம் 2ஆம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் நமது நாட்டிற்கு வந்தார். அவருடன் கல்விப் பணியை ஆரம்பித்த ஆசிரியர்கள் அனைவருமே வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டனர். அவர் விரும்பியிருந்தால் எப்பொழுதோ தனது குடும்பத்துடன் மலேயாவுக்கு அல்லது வேறு நாடுகளுக்குச்சென்றிருக்கலாம். வட்டுக்கோட்டையைப் பிரிந்து வாழ அவர் மனம் ஒருபொழுதும் ஒப்பவில்லை. நாம் இந்த மண்ணுக்குரியவர்கள் இந்த மண்ணிலே வாழ்ந்து இந்த மண்ணுடன் சங்கமமாகப் போகின்றவர்கள் என்ற தெளிவுடன் அவர் வாழ்ந்தார்.

**பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**

# மக்கள் முகம்



கடந்தகால யுத்த அனர்த்தங்களின் போதும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காகவும் மற்றும் செஞ்சிலுவைச் சேவையில் 18 வருடங்களை நிறைவு செய்து கொண்டமைக்காகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் தலைவர் சூரியகாந்தி தவராசா சிறந்த சமூக் சேவையாளரென தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டு தேசிய விருதும், சர்வதேச விருதும் வழங்கப்படவுள்ளன.

இந்த இரண்டு விருதுகளும் இன்று சனிக்கிழமை பண்டார நாயக்கா சர்வ.தேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள தலைமையகப் பொதுக்கூட்டத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்விலே குருதிக் கொடையாளருக்கான விருதினையும் இவர் பெற்றிருந்தார்.

(3-78)



வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் கடந்த வருடம் நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் சொல்வதெழுதல் நிகழ்வில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி சி.தட்சாயினி பெற்றுள்ளார்.

(3-353-204)



அருட் சகோதரர் தொபியாஸ் சி.எம்.எஸ்.எவ்.பிரான்சீஸ்கன் மறைபரப்புச் சபை அருட் சகோதரராகப் பணியேற்று 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளார்.

இவரது வெள்ளிவிழா ஆராதனைகள் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

பிரான்சீஸ்கன் சபை மாகாணத் தலைவர் ஜெரோமி கிறிஸ்ரி மற்றும் சபை சகோதரர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அவருக்கு ஆசி கூறினர்.

(3-190-204)



ஆஸ்திரேலிய சிட்னி வெஸ்ரேன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பருத்தித்துறையைச் சேர்ந்த மாணவி திருமதி மதிவதனி முருகதாஸ் அந்தப் பல்கலைக் கழகத்தின் சூழல் தொழில் நுட்பவியல் விஞ்ஞானப் பிரிவின் 2005ஆம் ஆண்டிற்கான அதிஉயர் பரிசைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசிலை சிட்னி பல்கலைக்கழக சூழல் தொழில் நுட்பவியல் விஞ்ஞானப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் எஸ்.மைக்கேல் வில்சன் வழங்கினார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த மதிவதனி முருகதாஸ் புலமைப்பரிசில் பெற்று ஆஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகிறார். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவியான இவர் புலோலி மேற்கைச் சேர்ந்த கால்நடை வைத்தியர்கள் தங்கராசா புனிதவதி தம்பதியரின் மகளாவார்.

(3-173)

# நூல் விமர்சை




**நூல்** :- *வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20ஆவது ஆண்டுமலர்.*
**வெளியீடு** :- *வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்*

**மி**கவும் அழகான அட்டைப்படத்துடன் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரால் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியிடப்பட்டுள்ளது.

கழகத்துடன் ஆரம்பமாகும் இந்நூலின் உள்ளே கிரியாகலாப முக்தாமணி ச.தேவராஜக்குருக்களின் ஆசியுரையுடன் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா, கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் உட்படப் பலரது வாழ்த்துச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து கழகம் பற்றிய நோக்கு, கழகத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி என்பனவும் உள்ளன. அத்துடன் கழகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் மற்றும் கழகத்தால் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களது புகைப் படங்கள் என்பனவும் உள்ளன.

இதேவேளை சுருக்கெழுத்துத் தட்டச்சுக்கலையை வளர்த்த பெரியோர்களான பிற்மன், இராவ்சாகிப், ம.சீனிவாசராவ், என்.சுப்பிரமணியம், பி.ஜி.சுப்பிரமணிய ஐயர், அமரர் சி.இராமலிங்கம், அமரர் இ.முத்தையா ஆகியோரது வரலாறும் இந்த நூலில் உள்ளன.

அத்துடன் தொழிற்பாதையை திட்டமிடல் தொடர்பாகவும், ஆரம்பகால தட்டச்சுக்கும் தற்போதைய கணனிக்கும் எவ்வாறு தொடர்புள்ளது என்பது பற்றிய ஆக்கங்கள் உட்படப் பல விடயங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை இந்நூலுக்கு பெரும் சிறப்பை ஏற்படுத்தியுள்ளது.

**கங்கா.**



**நூல்** :- *'துகிலிகை' காலாண்டு ஒவிய இதழ்*
**வெளியீடு** :- *யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத்துறை*
**ஆசிரியர்** :- *திரு.க.ரட்ணேஸ்வரன்*

**யா**ழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத் துறையினர் கடந்த 7.10.2005 அன்று 'துகிலிகை' எனும் ஓவிய சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர்.

சித்திரக் கலையை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நன்கு பயன்படக்கூடிய வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை காலாண்டு இதழாக இச்சஞ்சிகை வெளிவரவுள்ளது.

சித்திரக்கலை கற்கும் மாணவர்களுக்கு போதிய பாடநூல்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

இக்காலாண்டு சஞ்சிகையில் ரசனை பற்றிய ஒரு நோக்கு, தம்புள்ள குகைகள், வாழ இருக்கும் ஓவியங்கள் எம்பக்க மரச்சிற்பங்கள், கல்விகாரை, மைக்கல் அஞ்சலோ சுவரொட்டிகள், ஈசுரமுனி விகாரை போன்ற பல விடயங்கள் விளக்கப்படங்களுடன் வெளிவந்துள்ளது. க.பொ:த.சாதாரண தர மாணவர்களுக்கு பிரயோசனம் தரக் கூடிய வகையில் 2003ஆம் ஆண்டு வினாத்தாளும் விடைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரண தர சித்திரக்கலைப் பாடப்பரப்பின் உள்ளடக்கம், அதன் புள்ளி மதிப்பீட்டம் சங்களும் மற்றும் ஓவியர் பக்கமும் துகிலிகையில் இடம்பெற்றுள்ளது.

மொத்தத்தில் சித்திரக்கலைத் துறையினர்நன்மை அடையக் கூடிய விதத்தில் துகிலிகை வடிவம் பெற்றுள்ளது.

**க.இ.கமலநாதன்,**




**நூல்** :- *பொறுப்பனோயான் (இலக்கிய நாடகம்)*
**நூலாசிரியர்** :- *பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன்*
**வெளியீடு** :- *அவைக்காற்றுகைக்குழு சுன்னாகம்.*

**க**லைஞர்கள் சங்க இலக்கியங்களில் இருந்து பல்வேறு கலை வடிவங்களை உருவாக்கிக் கலை உலகிற்கு வழங்குகின்றார்கள். பழைமையில் இருந்து புதுமையைப் படைத்தல் கலைஞருக்குரிய சிறப் பாற்றல் ஆகும்.

பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் அவர்கள் சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை ஆழ அகலக் கற்றவர். பல்வேறு கலைகளில் கைதேர்ந்தவர். ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும், அரங்கக் கலைஞராகவும் விளங்கும் இவரது ஆற்றலுக்குப் "பொறுப்பனோயான்" எனும் இந்த இலக்கிய நாடகநூல் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

நாடகம் நடிப்பதற்கே; படிப்பதற்கல்ல என்பது ஒருகோட்பாடு. இது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நாடகம் நடிப்பதற்கும் படிப்பதற்கும் உரியது எனும் கோட்பாட்டை இவர் இந்த ஆக்கத்தின் மூலம் நிலை நாட்டியுள்ளார்.

காரணம் அரங்கக்கலையில் கைதேர்ந்து நாடக ஆக்க கர்த்தாவாகவும் நெறியாளராகவும் நடிகராகவும், கலைநுட்ப (ஒலி, ஒளி, ஒப்பனை) வல்லுநராகவும் இவர் இருப்பதால் தனது நாடக எழுத்துருவில் அரங்க ஆற்றுகைக்குரிய குறிப்புகளையும் தந்துள்ளார். அதனால் இந்த நாடகங்களைப் படிப்போர் தாம் படிக்கும் காட்சியை அகக்காட்சியில் காணக் கூடியதாயிருப்பது இந்த நூலின் சிறப்பம்சமாகும். இந்தக் குறிப்புகள் நெறியாள்கை செய்பவர்க்கு மட்டுமன்றிப் படித்துச் சுவைப்போர்க்கும் உபகாரமானவை.

இன்னுமொரு சிறப்பு இந்த நாடக நூலுக்குண்டு. சங்ககால மக்களின் வாழ்வொழுக்கத்தை இக்கால மக்களின் வாழ்வொழுக்கத்துக்குப் பயன்படுமாறு காட்டும் திறன் அது. அத்துடன் சங்கப் பாடல்களுடன் இக்காலத்துக்கேற்ற இலகுவான, மென்மையான இசைப் பாடல்களையும் இளையோடவிட்டிருப்பதும் அச்சிறப்புக்கு அணி சேர்க்கின்றது.

இந் நூலில் நான்கு நாடகங்கள் இடம்பெறுகின்றன. முதலாவது நாடகம் கலித்தொகைக் காட்சியொன்றை ஆதாரமாகக்கொண்ட பெண்மை கொல்லோ பெருமையுடைத்து என்பது எனும் இலட்சியம் உடையவளாய்த் திகழவேண்டும் என்ற நலச்சிந்தனையைக் காட்சிப் படுத்தியிருப்பது மனதைக் கவர்கிறது.

இரண்டாவது நாடகம் நெய்தல் நில ஒழுக்காற்றுக்கு அமைவாக அமைந்திருக்கின்றது. மூன்றாவது நாடகம் பாலைக்கவிச் சிந்தனையில் எழுந்த வாழ்க்கைப் பயணங்கள் என்பது களவியல், கற்பியல் ஆகிய அகத்திணை ஒழுக்கம் பற்றியது. உடன் நோக்கு எனும் உரிப் பொருளுக்கு விளக்கமாயுள்ளது.

நான்காவது நாடகம் பாரிவள்ளலை மூவேந்தரும் சேர்ந்து சூழ்ச்சியால் கொன்றதையும் பாரிமகளிரை புலவர் கபிலர் ஔவையாரிடம் ஒப்படைத்த செய்தியையும் இலக்கியச் செழுமையுடன் சித்திரிக்கின்றது.

சங்ககால மக்களின் வாழ்வியற் பண்புகளைச் சங்கப்பாடல்களைத் தளமாகக்கொண்ட செந்தமிழ்ச் சுவைகுன்றாது இக்கால மொழி நடையையும் பயன்படுத்திப் படிப்போர்க்கு இலக்கிய விருந்தாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

புற ஆற்றுகையில் நடித்தும், அக ஆற்றுகையில் படித்தும் நயப்பதற்கேற்ற அப்பழுக்கற்ற நல்ல நாடக நூல் இது என்பது புகழுரையல்ல.

கலாபூஷணம், சைவப்புலவர் **சு.செல்லத்துரை**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
17 – 10 – 1946

ஆண்டவன் அடியில்
22 – 09 – 2005

## திருமதி பரமேஸ்வரி செல்லத்தம்பி

அன்பின் பிறப்பிடமாய்
ஆசையின் உறைவிடமாய்
இல்லத்து அரசியாய் - எமை
ஈன்ற அன்னையே !
ஊரார் போற்றிட
ஏணியாய் நின்று உயர்ந்திட்ட
ஒப்பற்ற தாயே !
மாதம் ஒன்றாகிவிட்டது
நீ மறைந்து
ஆறாத் துயர்தனில் - உம்
ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னையின் திடீர் மறைவுச்செய்தியறிந்து தொலைபேசி மூலமும் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து துயர்பகிர்ந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உ றவுகள்.**

தகவல்: மகன் செ.பாலன்,
சாவகச்சேரி வடக்கு, கண்டி வீதி, மடத்தடி.

(C/45849)(50.19.11)

**புலமைப் பரிசில் - 2006**
பரீட்சை 1இல் கூடிய புள்ளி பெற்றோர்
- சி. அஞ்சலா - 178
- த. துவாரகன் - 176
- வி. சிந்துஜன் - 170

பரீட்சை 3-23.10.2005 ஞாயிறு காலை 8.30 மணி
- வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்கலாம்.
- விளாத்தாள் விடையுடன் விற்பனைக் குண்டு.

**நாவலர்** ஆனைப்பந்தி, யாழ்நகர். (41777)

**வேலையாள்கள் தேவை**
ஒப்பந்த அடிப்படையில் தொலைபேசி இணைப்பு, ஏனைய வேறு வேலைகளும் செய்வதற்கு கூலியாள்கள் தேவை.
Note: 18-40 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**சுன்னாகம் கிழக்கு,**
**கந்தையா வீதி,**
**இலஷ்மி தொலைத் தொடர்பகம்.**
(41782) தொ. பே:- 021 4591938

# வடமராட்சியில் இன்றும் நாளையும் வாய்ப் புற்றுநோய்ப் பரிசோதனை

வடமராட்சி,ஒக்.22

வடமராட்சிப் பிரதேசத்தில் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் வாய்ப்புற்றுநோய் தொடர்பான மருத்துவ ஆய்வுகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் 13 நிலையங்களில் வைத்து மேற்கொள்ளப்படவுள்ளன.

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் பல் வைத்திய நிபுணர்கள், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனின் அனுசரணையுடன் இந்த ஆய்வினை மேற்கொள்வார்கள்.

ஆய்வுகள் நடைபெறும் நிலையங்கள் வருமாறு:-

இன்று சனிக்கிழமை பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகம், ஆத்தியடி சிகிச்சை நிலையம், வியாபாரிமூலை ஆரம்ப சுகாதார நிலையம், வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை, தொண்டைமானாறு ஆரம்ப சுகாதார நிலையம், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை அம்பன் சிகிச்சை நிலையம், மணல்காடு இடம்பெயர்ந்தோர் முகாம், கற்கோவளம் ஆரம்ப சுகாதார நிலையம், திக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், கரவெட்டி அரசினர் மத்திய மருந்தகம், சோளங்கன் ஆரம்ப சுகாதார நிலையம், இமையாணன் சிகிச்சை நிலையம் ஆகியவற்றிலும் - ஆய்வுகள் நடைபெறவுள்ளன. (9-173)

## ஆலய வாயிலில் சைக்கிளை திருட முயற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.22

ஆலய வாயிலில் நிறுத்திவைக்கப்பட்ட சைக்கிள் ஒன்றின் பூட்டை உடைத்து திருட முயன்றவர் கையும் மெய்யுமாக மடக்கிப் பிடிக்கப்பட்டு பொதுமக்களால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை ஆலய வழிபாட்டுக்கு வந்த ஒருவர் ஆலய வாயிலில் சைக்கிளை நிறுத்திவிட்டு வழிபடுவதற்காக உள்ளே சென்றுவிட்டார். அச்சமயம் பார்த்து அந்த இடத்திற்கு வந்த நபர் ஒருவர் சைக்கிளின் பூட்டினை உடைத்து அதனைத் திருட முயன்றுள்ளார் அந்தவேளை அவ்விடத்தில் கூடிநின்ற இளைஞர்கள் திருடனை மடக்கிப்பிடித்துத் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆலய வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கில்கள் இதற்கு முன்னரும் பலதடவைகள் களவாடப்பட்டுள்ளனஎன்று கூறப்படுகிறது.(ஐ-15)

**விசேட விலைக்கழிவு**
யாழ். - கொழும்பு, கொழும்பு - யாழ். விமானப் பயணத்திற்கு விசேட விலைக்கழிவு. (ரூபா 11,000)
**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 222 7835

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை**
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா நடித்த
3 ஆவது ஜனத்திரள் வாரம்
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30 மட்டும்.

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)
(அ-45593)

**உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறேன்**



யா/உடுவில் மகளிர் கல்லூரி மாணவன்
**மகாதேவன் நர்த்தனன்**
அவர்கள் 2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார். அவரை பிள்ளையார், ஐயனார் துணை கொண்டு மென்மேலும் பல்கலையும் பெற்று வாழ்வில் உயர்ந்திட பாராட்டி வாழ்த்துகிறேன்.
"ஜெயநிகேதன்",
வங்களா லேன்,
மல்லாகம். (சி/45871)(46-33-13-12-34) அம்மம்மா.

# நடமாடும் வங்கிச்சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.22

சேமிப்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் வங்கிச் சேவை ஒன்று நாளை 23ஆம் திகதி வலி. தென்மேற்கில் மாதகல் சென்தோமஸ் தேவாலயத்திலும் சண்டிலிப்பாய் பாரதி ச.ச.நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மக்கள் தங்களை நாடிவரும் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியினருடன் தொடர்பு கொண்டு புதிய கணக்குகளை திறந்து தங்களது சேமிப்புப் பழக்கத்தினை அதிகரித்துக் கொள்ளலாம் என்று வலி. தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ப.சச்சிதானந்தன் தெரிவித்தார். (9-185)

* * *

சேமிப்பு மாதத்தையொட்டி சங்கானை மக்கள் வங்கியின்விசேட கருமபீடம் நடமாடும் சேவை ஒன்றை நாளை மு.ப. 10 மணிமுதல் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

ஒவ்வொரு வயதினருக்கும் தத்தமது வசதிக்கேற்ப சேமிப்புக் கணக்குகளை இந்த நடமாடும் சேவையில் திறந்து கொள்ளலாம் என்றும்-

குறிப்பாக சிறார்களுக்கான சகலவகையான கணக்குகளும் திறக்கும்போது தொகைக்கேற்ப பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும சங்கானை மக்கள் வங்கியின் முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (9-29)

## செயற்றிட்டப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஒக்.22

கொழும்பு மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரனையுடன் சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் 'சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சிநெறி' இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூரிலுள்ள சமூக அபிவிருத்தி மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'சமாதானமும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரனும் 'சமாதானத்திற்கு பெண்களின் பங்களிப்பு' எனும் தலைப்பில் திருமதி எஸ்.வித்தியானந்தனும் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-13)

**NEW SCIENCE CENTRE**
CHEMISTRY DAY CLASS
பிரிவு II
Mon. 2.30 - 4, Tue. 4-6, Thurs. 2.30 -4.00
இப்பிரிவில் 400 மாணவர்கள் மட்டும் அனுமதி
இப்பிரிவில் அனுமதி பெறுபவர்களிற்காக
1. ORGANIC பிரிவு II
Mon., Fri. 12-1.00
2. Inorganic பிரிவு III
Sat., Sun. 12-1.00
3. THERMO CHEMISTRY
Sat., Sun. 12-1.00
அயன் சமநிலை Sat., Sun. 11-12
ஆரம்பம்: 24.10.05 திங்கள் 2.30 P.M.
BY:- அன்பழகன் B.Sc.
(41723)(46)

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து வைத்திலிங்கம்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் கடமையாற்றியவருமான வைரமுத்து வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (21-10-2005) வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நாகம்மா (வடிவு) அன்புக் கணவரும், புஸ்பமலர் (ஜேர்மன்), செல்வமலர் (திருநெல்வேலி), இராசமலர் (பிரான்ஸ்), நஞ்சிதமலர் (திருநெல்வேலி), செல்வராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் மற்றும் திருக்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசீலகாந்தா (ஜேர்மன்), ஜெயபாலசிங்கம் (பாலா- திருநெல்வேலி), மனோகரன் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (உதயன்-திருநெல்வேலி), சுகந்தினி (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கண்மணி, காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, குணசிங்கம், சின்னராசு நாகரத்தினம் மற்றும் சரஸ்வதி (கனடா)ஆகியோரின் சகோதரரும் தம்பிஐயா (கனடா), கந்தசாமி (திருநெல்வேலி), முத்துக்குமாரசுவாமி (இருபாலை) ஆகியோரின் மைத்துனரும் கஜமுகி, குகன்ஜா, ஆரதி, தனஞ்சயன், ஆதவன், கௌசிகன், பௌசிகா, அன்புஜா, மதுஷா, விதுஷா, கோகுலன், திபானி, நிலானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 22-10-2005 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் மைல் கல்,* (41774)(46-33-54-13-12-34) *தகவல்,*
*பலாலி வீதி, திருநெல்வேலி.* ***குடும்பத்தினர்.***

### திருமதி வேலாயுதம் நல்லம்மா



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலாயுதம் (முன்னாள் சைக்கிள் கடை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் நகுலேந்திரனின் தாயாரும் சசீந்திராவின் மாமியாரும் சஜீனாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2004) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

மீசாலை வடக்கு, **வே. நகுலேந்திரன் (மகன்)**
கொடிகாமம். (41784)(33-54-13-12-34) **சி. குணநாயகம் (பெறாமகன்)**

### ஆறுமுகம் பொன்னையா

சரசாலை வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னையா நேற்று (21.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தெய்வேந்திரன் (தபாலதிபர்), தவேந்திரன் (ஜேர்மனி), ரூபி, தனலட்சுமி (முன்னாள் சுருக்கெழுத்தாளர், மாவட்ட நீதிமன்று சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஷ்பவதி, மங்கையர்க்கரசி, பரமநாதன் (ஊரிக்காடு) ஆகியோரின் மாமனாரும் தணிகைவேந்தன், செந்தூர்க்குமரன், கிருஷ்ணா, திருவேரகன், நர்மதா, விதுர்ஷன், வீணா, நவீன், மிதிலா, அனோஜா, ரஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2005) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மட்டுவிலில் நடைபெற்று, பூதவுடல் ஊரிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. **தகவல்:பொ.தெய்வேந்திரன்**
(பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி) **(தபாலதிபர் - மகன்)**
(41787)(33-54-13-12-34)

## தமிழீழ நிர்வாக சேவை , தமிழீழம்
# காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

1) காடுகள், பற்றைக்காடுகள் அழிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

2) நீண்டகாலம் பராமரிப்பின்றி பற்றைக்காடாக வளர்ந்துள்ள உறுதிப்படுத்தப்பட்ட காணிக்கான ஆவணமுள்ள உரிமையாளர் பற்றைக்காட்டினை வெட்டி காணியை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பின் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினரின் எழுத்துமூலமான முன்னனுமதி பெற்ற பின்பே பற்றைக்காட்டினை வெட்டுதல் வேண்டும்.

3) அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்போர் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

4) காணிகள் அரசினால் வழங்கப்பட்டபோது எத்தேவைக்கென வழங்கப்பட்டதோ அத்தேவைக்கு மட்டுமே காணி பயன்படுத்தப்படல் வேண்டும். வழங்கப்பட்ட காணியை பிற தேவைக்கு பயன்படுத்த முனைவதும், விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும், குறித்த காணி பிற தேவைக்கும் விற்பனைக்கும் உட்படுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்படின், அக்காணி சம்பந்தமாக மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை, காணிப்பகுதியுடன் நேரில் தொடர்புகொண்டு எழுத்து மூலமான முன் அனுமதி பெற்ற பின்பே காணியைப் பிற தேவைக்குப் பயன்படுத்த முடியும்.

5) திட்டங்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணிகள் காணி உரிமையாளர்களினால் நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்தமையினால், அக்காணிகளை அவரது உறவினர்கள், உறவினர் அல்லாதோர் ஆட்சிப்படுத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணியினை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இப்படிப்பட்ட காணியினை யாராவது விற்பனை செய்திருப்பின் அக்காணி மீள சுவீகரிக்கப்படும். இதற்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது.

6) 5இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் யாராவது நீண்டகாலம்/குறுகியகாலம் ஆட்சிப்படுத்தி வைத்திருப்பின் அக்காணி தொடர்பான விவரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையுடன் தாமதமின்றித் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

7) வெளிநாட்டில் வாழ்பவர்களின் காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணி தொடர்பான விவரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தாமதமின்றி தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8) குடியிருப்பதற்கு காணி இல்லாத குடும்பங்கள் தமக்கு காணி எதுவும் இல்லை என்ற கிராம அலுவலர், அக் கிராம முன்னேற்ற சங்கம் ஆகியோரின் உறுதிப்பாட்டுக் கடிதத்துடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தொடர்புகொண்டு குடியிருப்பிற்கான காணியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

9) இருந்த காணியை விற்றவர்கள், பிற மாவட்டத்தில், பிற கிராம அலுவலர் பிரிவில் காணி உள்ளவர்கள் நிரந்தரமான குடியிருப்புக்காணிக்கு விண்ணப்பிக்க முடியாது. நிரந்தர குடியிருப்புக்காணி பெற்றவர் அக்காணியை எக்காரணம் கொண்டும் விற்பனைசெய்யமுடியாது. அப்படியான காணியை எவராவது விலைக்கு வாங்குபவர்களாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**தமிழீழ நிர்வாகசேவை,**
**நடுவப்பணியகம்**
**155, பாரதிபுரம்,**
**கிளிநொச்சி.**

(சி/45884)(33-54-13-12-34)

# வீட்டில் இருந்த யுவதியை வானில் வந்த கும்பல் கடத்தியது

## கொய்யாத்தோட்டம் பகுதியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

கொய்யாத்தோட்டம் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் நேற்றிரவு புகுந்த இனந்தெரியாத குழுவொன்று அங்கிருந்தவர்களைத் தாக்கி விட்டு யுவதி ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளது.

நேற்றிரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

'ஹயஸ்' வான் ஒன்றில் வந்த கோஷ்டியினரே வீட்டில் இருந்த பெண்களையும் சிறுவர்களையும் தாக்கிவிட்டு யுவதியைக் கடத்திச் சென்றனர் என்று கூறப்படுகிறது. யுவதி கடத்தப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை என்று கூறப்பட்டது.

கடத்தல் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் செ.கிஷான் (வயது 11) என்ற சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9-ரி)

# குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டி தமக்கு வேண்டாம் என்கிறார் ரணில்!

கொழும்பு,ஒக்.22

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது குண்டுகள் துளைக்காத ஆடைகளையோ, கண்ணாடிக் கூண்டுகளையோ பயன்படுத்துவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

பாதுகாப்புத் தொடர்பில் அச்சுறுத்தல்கள் இருப்பதால் தூரப்பிரதேசங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தும்போது குண்டுகள் துளைக்காத கண்ணாடிக் கூண்டுகளை பயன்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அந்த யோசனைகளை ஏற்காத ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் ஆதரவை தேடிச்செல்லும்போது இடையில் தடுப்புகள், தடைகள் இருக்கக்கூடாதென்றும், தலைவரென்பவர் மக்களிடம் நெருங்கக் கூடியவராக இருக்கவேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருக்கிறாராம். இதனால் குண்டுகள் துளைக்காத கண்ணாடிக் கூண்டுகளைத் தாம் பயன்படுத்தப் போவதில்லையென்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டாரெனத் தெரிய வருகிறது. (ஐ-க)

# ஸ்ரீல. சு. கவையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து கொள்கைகளை ஜே.வி.பியினர் வகுத்திருக்கின்றனர். அந்த ஐந்தாவது கொள்கையில் ஜே.வி.பியைக் கட்டியெழுப்பவேண்டுமாயின், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாமலாக்கி, அதனைக் கருவறுக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி அழிக்கவேண்டுமாயின் பண்டாரநாயக்காக்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. பண்டாரநாயக்காக்கள் அரசியலில் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ற சிந்தனையில் இருப்பவர்கள் அல்லர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எக்காரணங்களுக்காகவும் எனது பிள்ளைகள் அரசியலுக்கு வரமாட்டார்கள். வரவும் விடமாட்டேன். எமது குடும்பம் 78 வருடங்கள் அரசியலில் துன்பங்களை அனுபவித்துவிட்டது. எஞ்சியிருக்கும் இருவரும் அரசியல் காரணங்களால் துன்பங்களை அனுபவிக்க இடமளிக்கமாட்டேன்.

இப்போது எஞ்சியிருப்பது இருவர் மட்டுமே. ஒன்றில் கொலை செய்வார்கள். இல்லையேல் வேறு ஏதேனும் செய்வார்கள். எமது கட்சிக்குள்ளேகூட கொலை செய்தாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை. எனவே, பண்டாரநாயக்காவின் சந்ததியை வைத்துக்கொண்டு அரசியல் நடத்த வேண்டும் என்ற கருத்தில் நான் இல்லை.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் செய்யப்பட்ட அந்த நாள் முதல், அதாவது சிறு வயது முதல், அதிகாரப்பகிர்வு குறித்து எனக்குத் தெரியும். அந்தத் தீர்வில் நம்பிக்கையில்லாத காரணத்திற்காக எனது தந்தை அதைக் கிழித்தெறியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிறு குழுவினரான அடிப்படைவாதிகளின் தேவைக்கமைய அவர் அவ்வாறு அதனைச் செய்தார். அன்று அவர் அதைச் சரிவரச் செய்திருந்தால் - அதைச் செய்ய அவரின் அமைச்சரவை அவருக்கு சக்தியை வழங்கியிருந்தால் - இன்று இனப்பிரச்சினையோ, யுத்தமோ இருந்திருக்காது. இலங்கை, உலகத்திலேயே அபிவிருத்தியடைந்த நாடாக இருந்திருக்கும்.

மாகாண சபைகளை எவராலும் கலைக்க முடியாத ஒரு நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அன்று மாகாண சபைகளைக் கலைக்குமாறு கூச்சலிட்ட - மாகாணசபைத் தேர்தல்களிலும் போட்டியிடாத - ஜே.வி.பி., இன்று நாம் கொடுத்த புத்துயிர்ப்பினால் சண்டையிட்டுக் கொண்டு மாகாண சபைகளின் உறுப்புரிமையைப் பெற்றுச் செயற்படுகின்றது.

இன்று இவைதான் நடக்கின்றன. அது எப்படியென்று உங்களுக்குத் தெரியும். தேர்தல் காலத்தில் தற்போது இதற்குமேல் நான் எதுவும் கூறமாட்டேன். ஆனாலும் கட்சிக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளைக் கட்சித் தலைவி என்ற அடிப்படையில் எடுக்கவேண்டிவருமென்று நான் எமது அரசியல் குழுவிலுள்ள 60 உறுப்பினர்களையும் அழைத்து கூறியிருக்கிறேன். கட்சிக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அதுபற்றிப் பேசுங்கள். அந்த 'படம்' (பிலிம்) காட்டும் வேலையை நிறுத்துங்கள்.

நாட்டில் சிறந்த தலைவர்களாக இருக்க வேண்டியவர்கள், இராஜதந்திரிமார்களாகக் கடமையாற்ற வேண்டியவர்கள் போன்றோரில் 70 வீதமானவர்கள் இன்று வெளிநாடுகளில் இருக்கின்றனர். அப்படி இல்லையேல் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கின் யுத்தம், ஜே.வி.பியின் வன்முறை, ஜே.ஆர். ஜெயவர்த்தனா - பிரேமதாஸவின் வன்முறைகளால் இவை ஏற்பட்டன. கூடுதலானோர் கொல்லப்பட்டனர்; மிகுதியானோர் வெளிநாடு சென்றனர். கடந்த மூன்றரை வருடகாலமாக அவ்வாறான பலர் வெளிநாடுகளிலிருந்து திரும்ப ஆரம்பித்தனர். யார் என்ன சொன்னாலும் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால்தான் இது ஏற்பட்டது.

நாட்டின் ஸ்திரமற்ற தன்மையொன்று ஏற்படுவதால் அவ்வாறான பலர் மீண்டும் வெளிநாடுகளில் வேலை தேடுகின்றனர் என என்னால் அறியமுடிகின்றது. - என்றார் ஜனாதிபதி. (ஐ-க)

# திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த நிகழ்வுக்காக இன்று நகரில் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்துகொள்வர். (ஐ-க)

# வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் விரிவாக ஆராய்ந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளுக்கு அப்பால் அரச ஊடகங்கள் பாரபட்சமாகச் செயற்படுவதாக எதிர்க்கட்சிகளும், தனியார் துறை ஊடகங்கள் பக்கச் சார்பாக செயற்படுவதாக ஆளுந்தரப்பும் இங்கு முறையிட்டன.

அரச ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் பக்கச்சார்பாக இருக்குமாயின் அவற்றை வழிப்படுத்துவதற்காக கூடிய விரைவில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரைத் தாம் நியமிக்க வேண்டிவருமென்று தேர்தல் ஆணையாளர் அங்கு கூறியுள்ளார். தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தம்மிடம் இல்லையென்றும் தேவைப்படின் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடலாமென்றும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்குக் கிழக்கில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அங்கு குறிப்பிட்ட தேர்தல் ஆணையாளர், மோசடிகள் இடம்பெறலாமெனக் கருதப்படும் தேர்தல் நிலையங்களில் வெளியிலிருந்து உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்களென்றும் அங்கு உறுதியளித்துள்ளார்.

அதேபோல், மாவட்ட ரீதியிலுள்ள கட்சி அலுவலகங்களில் சோடனைகளை அமைக்கலாம் என்றும் சுவரொட்டிகள், 'கட் - அவுட்'களைப் பயன்படுத்தலாமென்றும் தேர்தல் ஆணையாளர் சம்மதம் தெரிவித்திருக்கிறார். (ஐ-க)

# ஆசிரியர்களின் போராட்டம் ஒத்திவைப்பு

அச்சுவேலி ஒக்.22

இலங்கைத் தமிழர் ஆசியர்சங்கம் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தத்தை ஒத்திவைத்துள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், ஆசிரியர்கள் அதிபர்களின் பிரச்சினைகள் மற்றும் தமிழ்மொழி தொடர்பான செயற்பாடுகள் புறக்கணிப்புக்கள் உள்ளடங்கிய 26 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை உலக ஆசிரியர் தினத்தன்று ஒரு நாள் சுகவீனப் போராட்டத்தை நடத்தியது.

ஒருநாள் அடையாள சுகவீனப் போராட்டத்தை அடுத்து - தமது கோரிக்கைகள் தொடர்பில் பேச்சு நடத்த கல்வி அமைச்சு அழைக்காவிடில் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்ய ஆசிரியர் சங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருந்தது.

இந்நிலையில் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சு நடத்த 26ஆம் திகதி சமூகமளிக்குமாறு சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை 24ஆம் திகதி நடத்தாது ஒத்திவைத்திருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலர் த.மகாசிவம் அறிவித்துள்ளார். (9-11)

# 'மிஸ்டர் அதாவுல்லா' என விளித்த செய்தியாளர் மிரட்டப்பட்டார்!

கொழும்பு, ஒக். 22

முஸ்லிம்களை 'தம்பிலா' என சிங்களத்தில் வண. தேரர் ஒருவர் அழைத்தமை அவ்வளவு பாரதூரமான விவகாரம் அல்ல என்கிறார் அமைச்சர் அதாவுல்லா.

ஆனால், செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அதாவுல்லாவைப் பார்த்து 'மிஸ்டர் அதாவுல்லா!' என்று விளித்து கேள்வி கேட்டதற்காக தமிழ்த் தினசரி ஒன்றின் ஊடகவியலாளர் ஒருவர் அதாவுல்லாவின் அடியாள்களால் (காவலர்களால்) மிரட்டப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று 'ஹொலிடே இன்' ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர்யாளர் உட்பட பல தமிழ்த் தினசரிகளின் செய்தியாளர்களும் ஏனைய நிருபர்களும் கலந்துகொண்டு கேள்விகள் பல எழுப்பினர்.

'சுடர்ஒளி' செய்தியாளரும் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஏனைய அமைச்சர்களுக்கு மத்தியில் இருந்த அமைச்சர் அதாவுல்லாவிடம் ஏனையோர் போன்று 'மிஸ்டர் அதாவுல்லா!' என விளித்துக் கேள்வி எழுப்பினார்.

அது போலவே மற்றொரு தமிழ்த் தினசரியிலிருந்து வந்த இளம் செய்தியாளர் ஒருவரும் 'மிஸ்டர் அதாவுல்லா!' என விளித்துக் கேள்வி எழுப்பினார்.

செய்தியாளர் மாநாடு முடியும் தறுவாயில் உள்ளே வந்த சிலர் சம்பந்தப்பட் தினசரியின் இளம் செய்தியாளரை முதுகில் தட்டி, போகமுன் தங்களைச் சந்தித்துவிட்டுச் செல்லுமாறு பணித்தனராம்.

மாநாடு முடிந்ததும் அந்த இளஞ் செய்தியாளரைத் தனியே கூட்டிச் சென்ற அவர்கள் அடிக்காத குறையாக அவரை மிரட்டினர். ''அங்கொடைக்குச் சென்று பத்திரிகையில் வேலையைப் பார்'' - என்று ஏசினார்கள் அவர்கள்.

''நீ என்ன பி.பி.ஸி. போன்ற பெரிய நிறுவனத்தின் ரிப்போட்டரா எங்கள் அமைச்சரை 'மிஸ்டர்' என்று அழைப்பதற்கு? 'கௌரவ' என்று குறிப்பிடாமல் இனி நடந்தால் உனது பல்லை - உடைத்து விடுவோம்!' - என்றெல்லாம் அச்சுறுத்தி அவரை அனுப்பிவைத்திருக்கின்றனர் அந்தக் கூட்டத்தவர்கள். (ஐ-க)

# நோர்வே தமிழர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும், சிறுவர்கள், இளையவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என நோர்வேயின் பல்வேறு நகரங்களிலிருந்தும் வந்த பெருந்திரளான மக்கள் பொங்கு தமிழ் தீப்பந்த எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டனர்.

நோர்வே அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழ் சர்வமதகுருமார் மற்றும் பேராளர்களின் உரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந் பொங்கு தமிழ் எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து சமாதானத்திற்கான தீப்பந்தங்களை ஏந்தியவாறு நோர்வே நாடாளுமன்றத்தைப் பேரணி சென்றடைந்தது.

இலங்கைத்தீவில் உண்மையானதும் நீதியானதுமான சமாதானம் உருவாக்கப்பட வேண்டும் -

தமிழீழ மக்களின் தன்னாட்சி இறைமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். -

போன்ற கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் அங்கு கையளிக்கப்பட்டது.

நோர்வேயின் புதிய கூட்டணி அரசாங்கத்தின் தலைமைக் கட்சியான தொழிலாளர் கட்சியின் ஒஸ்லோ பிரதேசத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜான் போலர் மற்றும் வெளியுறவு அரசியல் செயற்குழுவின் பேச்சாளர் ஓகத் வல்லா ஆகியோர் மனுவைப் பெற்றுக்கொண்டனர்.

தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டுமென்ற தமிழீழ மக்களின் விடுதலை வேணவாவிற்கு வலுச்சேர்க்கும் பொருட்டு, ஒஸ்லோ மாநகரில் அணிதிரண்ட நோர்வே வாழ் தமிழீழ மக்களின் ஒருமித்த உணர்வெழுச்சியின் குரலாய் வெளியிடப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''எழுவோம் தமிழின உரிமைக்காக'' எனும் இந்தப் பொங்கு தமிழ் தீப்பந்த எழுச்சிப்பேரணியில் கூடியுள்ள நோர்வே வாழ் தமிழீழ மக்களாகிய நாம் எமது ஒருமைப்பாட்டையும் உணர்வுகளையும் ஒன்று திரட்டி தமிழீழத் தாயகத்தில் வாழும் எமது மக்களின் நீதியானதும் உண்மையானதுமான விடுதலைக்காக இப்பிரகடனத்தினை புதிய நோர்வே அரசிற்கும் அனைத்துலக சமூகத்திற்கும் முன்வைக்கின்றோம்.

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற அழுத்தத்தினை அனைத்துலக சமூகத்திற்கும் முன்வைக்கின்றோம்.

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டுள் ள சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற அழுத்ததினை அனைத்துலக சமூகம் சிறிலங்காவிற்கு கொடுப்பதன் மூலம், இலங்கைத்தீவில் நீதியானதும், உண்மையானதுமான சமாதானம் உருவாக்கப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகிய வாழ்வுரிமைகளின் அடிப்படையில் தமிழீழ மக்களின் இறைமைக்கான போராட்டத்தினையும் தமிழர் தாயகத்தில் நடைமுறையிலிருக்கும் தனியாட்சிக் கட்டமைப்பையும் அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பயணங்கள் வரவேற்கப்படவில்லை என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடானது தமிழ் மக்களின் போராட்ட நியாயப்பாடுகளையும் உண்மை நிலைமைகளையும் அனைத்துலக சமூகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கான கதவுகளை மூடியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அந்நிலைப்பாடு மீள்பரிசீலிக்கப்படுவதோடு, இலங்கைத்தீவின் இனப்பிணக்கில் தொடர்புள்ள இரண்டு தரப்புகளும் சமத்துவத் தன்மையுடன் நடத்தப்படவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா அரசபடைகள் வெளியேற்றப்பட்டு, தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் நிழல்யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு, நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் போர்நிறுத்த ஒப்பந்தம் செழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் மேன்மை பேணப்படவேண்டும்.

தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டுமென்ற தமிழீழ மக்களின் விடுதலை வேணவாவிற்கு வலுச்சேர்க்கும் பொருட்டு இப்பிரடகனம் ஒஸ்லோ மாநகரில் அணி திரண்ட நோர்வே வாழ் தமிழீழ மக்களின் ஒருமித்த உணர்வெழுச்சியின் குரலாய் வெளியிடப்படுகின்றது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


அறிவொளி (நல்லூர்)

Physics திரு. ம. ஸ்பெல்மன்

A/L 06 வினா விடை

வெளிமாவட்ட மாணவர்கள் மட்டும்

ஆரம்பம்: 23.10.2005 ஞாயிறு

3.30 - 4.30 pm

கற்றலுக்குத் தேவையான முக்கிய குறிப்பேடுகள் வழங்கப்படும். (41722)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.